REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 பெப்ரவரி 7 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN
1932 - 2022
வரு. 91 இல. 32
Tuesday 07, February, 2023
12பக்கங்கள்
50/-




## உயர் நீதிமன்ற நீதியரசர் உட்பட மூவர் ஜனாதிபதி முன் சத்தியப்பிரமாணம்!



உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவர் உட்பட மூவர் நேற்று காலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர். அதன்படி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் 04

## துருக்கியை நேற்று அதிகாலை உலுக்கிய சக்திவாய்ந்த பூகம்பம்!

### அயல்நாடான சிரியாவிலும் சேதங்கள்; 1,500 இற்கும் அதிகமானோர் பலி!



துருக்கியில் நேற்றுக்காலை ஏற்பட்ட 7.8 ரிக்டர் அளவிலான பாரிய பூகம்பத்தினால் துருக்கியிலும் அயல்நாடான சிரியாவிலும் 1,500 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாக நேற்று மாலை வரை கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. அந்நாடுகளில் இடம்பெற்ற உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகின்றது.

துருக்கியின் காஸியன்டெப் நகருக்கு அருகில் 17.9 கிலோமீற்றர் ஆழத்தில் இப்பூகம்பம் ஏற்பட்டதாக அமெரிக்க 04

### நாடளாவிய ரீதியில் சுகாதார அமைச்சில்

## பதிவு செய்யப்படாது இயங்கும் 10,000 சுகாதார நிறுவனங்கள்

### 28 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்ய கால அவகாசம்



(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டிலுள்ள அனைத்து தனியார் வைத்தியசாலைகள் உள்ளிட்ட சுகாதார நிறுவனங்கள் இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையில் பதிவுசெய்யப்பட வேண்டும் என தனியார் வைத்தியசாலை அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் டாக்டர் தம்மிக்க அழகப்பெரும தெரிவித்துள்ளார். சுமார் 10,000 தனியார் சுகாதார நிறுவனங்கள் பதிவுசெய்யப்படாமல் உள்ளதாகவும் இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்பதாக அந்த நிறுவனங்கள் பதிவுசெய்யப்படாவிட்டால் அவற்றுக்கெதிராக சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 04

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில்

## 09ஆவது பாராளுமன்றத்தின் 04ஆவது கூட்டத்தொடர் நாளை

### சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அறிவிப்பு



ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாளை 04

### IMF வழங்கும் நிதியை பெற்றுக்கொள்ள

## சீன வங்கியின் உத்தரவாதம் போதுமானது ஒன்றல்ல

### அல் ஜசீரா பேட்டியில் அமைச்சர் அலிசப்ரி கருத்து



சீனாவின் எக்சிம் வங்கி வழங்கிய உத்தரவாதங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியை இலங்கை பெற்றுக்கொள்வதற்கு போதுமானவையில்லை என தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்ப்பதற்கும் சீனா வழங்கியுள்ளமைக்கும் இடையில் இடைவெளியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார். 04

## இரட்டை பிரஜாவுரிமை பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் யார்?

### இரு வாரங்களுக்குள் தகவல் தருமாறு கோரிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்

பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்ட எம்.பிக்கள் தொடர்பில் குடிவரவு குடியகல்வு திணைக்களம் விபரங்களைப் பெற்றுத்தராவிட்டால் அதுதொடர்பில் 04

PAFFREL

### கோடீஸ்வர வர்த்தகர் மர்ம மரணம்;

## யுவதி ஒருவர் உட்பட மற்றுமொருவர் அதிரடி கைது

### தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி



லோரன்ஸ் செல்வநாயகம்

பெலவத்த பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் தமது வீட்டின் நீச்சல் தடாகத்தில் கடந்த சில தினங்களுக்கு 04

### உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடவிருக்கும்

## 80,000 பேரில் 20,000 பேருக்கு எதிராக குற்றச்சாட்டுகள்

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் 80,000 வேட்பாளர்களுள் 20,000 வேட்பாளர்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களாக இருந்தபோது உள்ளூராட்சி சபைகளுக்குச் சொந்தமான கடைகளை உறவினர்களுக்கு 04

### 2009 மே கூட்டறிக்கை குறித்து

## பான் கீ மூனுக்கு மனோ MP ஞாபகமூட்டி அறிக்கை



இலங்கை வந்துள்ள முன்னாள் ஐ.நா செயலாளர் பான் கீ மூன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கட்டாயம் சந்தித்த 2009 மே கூட்டறிக்கையை ஞாபகப்படுத்த வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். தான் கடைசியாக போர் முடிந்த 04

### 200 மில். டொலரை திருப்பிச் செலுத்துவதற்கு

## செப்டம்பர் வரை அவகாசம் வழங்கியுள்ள பங்களாதேஷ்



(லோரன்ஸ் செல்வநாயகம்)

பங்களாதேஷ் அரசாங்கம் இலங்கைக்கு பெற்றுக் கொடுத்துள்ள கடனை மீளப் பெற்றுக் கொள்வதற்கு செப்டம்பர் மாதம் வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கு விஜயம் 04

### அதிகார பகிர்வை எதிர்க்கவில்லை;

## 13 ஆவது திருத்தம் தொடர்பில் அவசர முடிவு தேவையில்லை

### SLPP பொதுச் செயலாளர் சாகர காரியவசம் கருத்து



சர்ச்சைக்குரிய 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கான தீர்மானத்தை அவசர அவசரமாக எடுக்கக் கூடாது 04

## முட்டைகளுக்கான புதிய விலையுடன் வர்த்தமானி

### வெள்ளை ரூ. 44; சிவப்பு ரூ. 46



(லோரன்ஸ் செல்வநாயகம்)

முட்டைக்கான புதிய கட்டுப்பாட்டு விலையை விதித்து புதிய வர்த்தமானியொன்றை நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை வெளியிட்டுள்ளதாக நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 04

## லாப் எரிவாயுவின் விலைகளும் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

லாப் சமையல் எரிவாயுவின் விலைகளும் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க 12.5 கிலோ கிராம் எடை கொண்ட 04

### A/L பரீட்சை காலத்தில் மின் துண்டிப்பு;

## அடிப்படை உரிமை மனு விசாரணை ஜூலை 14இல்



(லோரன்ஸ் செல்வநாயகம்)

பரீட்சை நடைபெறும் காலங்களில் மின் துண்டிப்பை தவிர்க்குமாறு மின்சார சபை உள்ளிட்ட நிறுவனங்களுக்கு உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு 04

## தந்தை, இரு பிள்ளைகள் சடலங்களாக மீட்பு

### அரநாயக்க பிரதேசத்தில் அதிர்ச்சிச் சம்பவம்




(லோரன்ஸ் செல்வநாயகம்)

அரநாயக்க பகுதியில் இளம் தந்தையொருவர் தமது 2 பிள்ளைகளையும் கொலை செய்துவிட்டு தாமும் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று 04

## தமிழ் கட்சிகளை பிரித்தாளும் முயற்சியில் இந்தியா ஈடுபடவில்லை

### ஒற்றுமையுடன் இருப்பதனையே விரும்புகிறது



இந்தியா தமிழ் தேசிய கட்சிகளை பிரித்தாளும் நடவடிக்கையில் ஈடுபடவில்லை என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். தமிழ் தேசிய கட்சிகள் ஒற்று 04

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்



கொழும்பு கங்காராம விகாரையின் வருடாந்த பெரஹராவை முன்னிட்டு நேற்று முன்தினம் (05) இரவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ ஆகியோரால் யானை மீது புனித பேழை வைக்கப்பட்டபோது எடுத்த படம்.

# அடிப்படை பொருளாதார கட்டமைப்புக்கு 10 லட்சம் கோடி ஒதுக்கீடு

## நிதியாண்டு திட்ட அறிக்கை பற்றி மோடி கருத்து

ஏழைகள், நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் விவசாயிகளின் அபிலாஷைகளையும் அவர்களின் கனவுகளையும் நிறைவேற்றி வைக்கும் வரவு – செலவு நிதியறிக்கையாகவே இந்த 2023 – 24 காலப்பகுதிக்கான நிதியறிக்கையை நான் காண்கிறேன். இது நாட்டின் வளர்ச்சிக்கான கூறுகளைக் கொண்டது என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாட்டின் அடிப்படை பொருளாதார கட்டமைப்புகளின் பேரில் இந் நிதியாண்டில் பத்து லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும், இது அபிவிருத்திக்கு புதிய உந்து சக்தியாக அமையும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ள டிஜிட்டல் மூலமான பண பரிவர்த்தனை வெற்றியளித்திருப்பதையடுத்து அதை விவசாயத் துறையிலும் அறிமுகம் செய்யும் வகையில் விவசாயத்துறைக்கான டிஜிட்டல் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படவுள்ளதாக தெரிவித்திருக்கும் அவர் நிதியறிக்கையில் சிறப்புகளைத் தொட்டுக் காட்டினார்.

'இந் நிதியறிக்கையில் புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் புதிய பொருளாதாரச் கொள்கைகளின் பால் எம் கவனத்தை திருப்பியுள்ளோம். இல்லத்தரசிகளை சக்திமிக்கவர்களாக்கும் வகையில் அவர்களுக்கான சேமிப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மத்திய தர வர்க்கத்தினர் பொருளாதார அபிவிருத்திக்கு முக்கியமானவர்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கான வரியில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதோடு நிவாரணங்களும் வழங்கப்பட்டுள்ளன' என அவர் வரவு – செலவு திட்டம் பற்றி மேலும் தெரிவித்தார்.



முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக பதவியேற்றுள்ள செய்னுல் ஆப்தீன் முஹம்மத் பைஸல் அவர்களை நேற்று (06) சர்வ மதத்தலைவர்கள் சந்தித்து தமது வாழ்த்துக்களை தெரிவித்து, பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். இந்நிகழ்வில் சர்வ மதத் தலைவர்களான சாஸ்த்ரபதி கலாநிதி கலகம தம்மரன்சி நாயக தேரர், சிவ ஸ்ரீ கலாநிதி பாபு சர்மா குருக்கள், அல்ஹாஜ் அஸ்ஸெய்யத் கலாநிதி ஹஸன் மௌலனா அல்காதிரி மற்றும் பாதிரியார் கலாநிதி நிஷான் குரே ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

# மணிப்பூர் மாநிலத்தை கல்விக் கேந்திரமாக மாற்ற வேண்டும்

## அரசுக்கு அழுத்தம் தரும் மணிப்பூர் கல்வியாளர்கள்

பயிலும் ஆற்றல் கொண்ட மாணவர்கள் மணிப்பூரை விட்டு வெளியேறாமல் மணிப்பூர் மாநிலத்திலேயே உயர்கல்வி பெறச் செய்ய வேண்டும் என்றும், எனவே தகுதியான உயர் கல்வி பீடங்களை இங்கேயே நிறுவுவதற்கான நடவடிக்கைகள எடுக்கப்பட வேண்டும் எனவும் மணிப்பூர் கல்வியாளர்கள் மாநில அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சிறப்பான ஏற்பாடுகளையும் வசகதிகளையும் கொண்ட கல்லூரிகளை உருவாக்கினால் வெளிமாநிலங்களை நோக்கி மாணவர்கள் படையெடுக்க மாட்டார்கள் என்பதை சுட்டிக் காட்டும் கல்வியாளர்கள், எவற்றுக்கெல்லாம் இந்தியாவிலும் வெளியுலகிலும் போட்டியும் சவாலும் நிலவுகிறதோ, அத்துறைகளில் மணிப்பூர் மாணவர்கள் பயிற்றுவிக்கும் வசதிகளை மாநிலத்தில் ஏற்படுத்துவது மிக முக்கியம் என்றும் குறிப்பிடுகின்றனர். அறிவுசார் பொருளாதாரத்துக்கே எதிர்காலமும் சவால்களும் உள்ளதால் மணிப்பூரில் அது சார்ந்த உயர்கல்வி கற்கைகளை உருவாக்குவது அவசியம் என்று வலியுறுத்துகின்றனர். சீனா வன்பொருள் உற்பத்தியில் முன்னணி வகிப்பது போல இந்தியாவின் தென்புல மாநிலங்களே மென்பொருள் பொறியியல் துறையில் சிறப்பாக செயல்படுவதாகக் குறிப்பிடும் மணிப்பூர் கல்வியாளர்கள், இம்மாநிலத்தை கல்விக் கேந்திரமாக மாற்றிக் காட்டினால் மணிப்பூர் மாணவர்களின் வெளியேற்றத்தைத் தடுக்கலாம் என்று கூறியுள்ளனர்.




ஈரான் திரைப்பட விழா நேற்று கொழும்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன மற்றும் ஈரான் இஸ்லாமிய குடியரசின் தூதுவர் உட்பட அதிகாரிகளையும் படங்களில் காணலாம்.

# "கல்முனை கடற்கரை பூங்காவில் மரநடுகை !

*(சாய்ந்தமருது விசேட நிருபர்)*

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் 75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, நடைமுறைப் படுத்தப்படுகின்ற "இளைஞர்களின் பங்களிப்புடன் தூய்மை மற்றும் பசுமையான இலங்கை" எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அம்பாரை மாவட்டம்,கல்முனை பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி ஏ.எல்.எம்.அஸீமின் நெறிப்படுத்தலில் கல்முனை பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கல்முனை கடற்கரை பூங்கா முன்றல் பகுதியில் மரநடுகை ( 05) பிற்பகல் இடம்பெற்றது

இதன் போது அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஏ.முபாரக் அலி, இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அஸ்கி,கல்முனை பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளன தலைவர் ஆர்.எம்.யசார், உப தலைவர் எம்.என். எம்.அப்ராஸ்,உட்பட இளைஞர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



# காஷ்மீர் நட்புறவு தினம் நேற்று கொழும்பில் அனுஷ்டிப்பு

## வெளிநாட்டு பிரமுகர்களும் பங்கேற்பு



*அஷ்ரப் ஏ சமத்*

காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் பாகிஸ்தானின் நிபந்தனையற்ற ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், "காஷ்மீர் நட்புறவு தினம்" நேற்று (06) கொழும்பில் அனுஷ்டிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு கருத்தரங்கு மற்றும் புகைப்படக் கண்காட்சி ஒன்றும் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த விழாவில், பல வெளிநாட்டு தூதுவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பாகிஸ்தான் சமூகத்தினர், காஷ்மீர் நலன்விரும்பிகள் மற்றும் இலங்கையின் ஊடக பிரதிநிதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

பாகிஸ்தான் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரின் செய்திகள் வாசிக்கப் பட்டன.

இந்நிகழ்வில் முக்கிய பேச்சாளர்களாக பொருளாதார அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் சபை உறுப்பினர் ஷிராஸ் யூனுஸ் மற்றும் திருமதி சூரியா ரிஸ்வி செயலாளர் இளம் முஸ்லிம் பெண்கள் சங்கம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

காஷ்மீர் பிரச்சினைக்கு அமைதியான தீர்வினை வலியுறுத்திய அனைத்து பேச்சாளர்களும் சமய நல்லிணக்கம் மற்றும் அனைவரினதும் அமைதியான சகவாழ்வின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தனர்.

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) உமர் ஃபாரூக் பர்கி

உரையாற்றும்போது, காஷ்மீர் சகோதர, சகோதரிகளிகளுடன் தோளோடு தோள் நின்று எப்போதும் துணை நிற்போம். மனித உரிமை மீறல்களை உலக நாடுகள் குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபை கவனத்தில் கொள்ள வேண்டிய காலம் இதுவாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

" ஜம்மு மற்றும் காஷ்மீர் பிரச்சினைகளை சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் தீர்க்கப்படல் வேண்டும், பாதுகாப்பு கவுன்சில் அதன் சொந்த தீர்மானங்களை செயல்படுத்தி காஷ்மீர் மக்களுக்கு இழைக்கும் பேரழிவினை தடுத்தல் வேண்டும். இந்திய கட்டுப்பாட்டில் உள்ள ஜம்மு மற்றும் காஷ்மீருக்குள் இந்திய அரசின் செயற்பாடுகள் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை அச்சுறுத்துகிறது " என்றும் உயர் ஸ்தானிகர் சுட்டிக்காட்டினார்.



மறைந்த முன்னாள் றோமன் கத்தோலிக்க திருச்சபை அதிமேற்றிராணியாரும் கொழும்பு பல்கலைக்கழக முன்னாள் வேந்தருமான கலாநிதி ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகையின் பூதவுடலுக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் சனிக்கிழமை (04) இறுதி மரியாதை செலுத்தினார்.

# நியாஸ் மௌலவி பௌண்டேசன் ஏற்பாட்டில் சுதந்திர தின நிகழ்வு

*ஏ.எஸ்.எம்.ஜாவித்*



இலங்கையின் 75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பு 12, பீர்சாஹிப் ஜும்ஆப் பள்ளிவாசல், இஹ்ஸானியா அறபுக் கல்லூரி மற்றும் நியாஸ் மௌலவி பௌண்டேசனும் இணைந்து வழமைபோன்று இம்முறையும் தேசிய தின நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. நியாஸ் மௌலவி பவுண்டேசனின் பணிப்பாளர் மௌலவி லமீர் ஹாபிஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கொழும்பு மாவட்ட பள்ளிவசல்களின் சம்மேளனத் தலைவர் சட்டத்தரணி சிராஸ் நூர்டீன் பிரதம அதிதியாகவும் கௌரவ அதிதிகளாக கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயர் ஐ.எம்.இக்பால், கெசல்வத்த பொலிஸ் நிலையத்தின் பிரஜா பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி டபிள்யு. நந்தசேன, அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா பிரதிநிதிகள், பள்ளிவாசல்களின் சம்மேளனத்தின் அங்கத்தவர்கள், ஏனைய பள்ளிவாசல்களின் பிரதிநிதிகள், பிரதேச பாலர் பாடசாலை சிறார்கள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தனர்.

# நகர்வலம்

## மாளிகாவத்தை ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் பாஸி இப்ராஹீம் காலமானார்

*ருஸைக் பாரூக்*

கொழும்பு, மாளிகாவத்தை ஜும்ஆப் பள்ளிவாசலின் பரிபாலன சபைத் தலைவர் அல்ஹாஜ் பாஸி இப்ராஹிம் தனது 75 ஆவது வயதில் காலமானார்.

இவர், அத்தியாயதுஷ் ஷாதுலிய்யா மற்றும் ரவ்லதுஷ் சாதுலிய்யா ஆகியவற்றின் தலைவராக இருந்து சேவையாற்றினார்.

அன்னாரது ஜனாஸா நேற்று 6 ஆம் திகதி மாளிகாவத்தை முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஜனாஸா நல்லடக்கத்தில் உலமாக்கள், புத்திஜீவிகள், அரசியல் பிரமுகர்கள், சாதுலியா தரீக்காவின் கலீபாக்கள், முகத்தமீன்கள், இஹ்வான்கள் மற்றும் பெருந்திரளான மக்கள் ஜனாஸா நல்லடக்கத்தில் கலந்து கொண்டனர்.

## அறிவோர் ஒன்றுகூடல்

ஸ்ரீலங்கா திட்டமிடல் சேவையின் ஓய்வுநிலை உதவிப் பணிப்பாளர் திரு. தம்பையா அரியரத்தின தலைமையில் நாளை 08ம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவிருக்கும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் “சமகால சூழலியல் நெருக்கடிகள்” என்னும் தலைப்பில் (BSc (Hons) F.R.Sc (UK) Fichem) பட்டய இரசாயனவியலாளர் திரு.சுப்பிரமணியம் பேராசிரியன் அவர்கள் உரை நிகழ்த்தவுள்ளார்.

# SJB உப தலைவர் சுஜீவ பேருவளைக்கு விஜயம்



*(பேருவளை விசேட நிருபர்)*

ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உப தலைவராக அண்மையில் நியமிக்கப்பட்ட முன்னாள் எம்.பி. சுஜீவ சேனசிங்க நேற்று முன்தினம் (05) பேருவளைக்கு விஜயம் செய்தார். பேருவளை தொகுதி ஐக்கிய மக்கள் சக்தி பிரதம அமைப்பாளரும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான இப்திகார் ஜெமீலின் அழைப்பில் வருகை தந்த அவர், சர்வதேச இரத்தினக்கல் வர்த்தக சந்தையாக திகழும் சீனன் கோட்டைபத்தைஇரத்தினக்கல்வர்த்தக சந்தைக்கும் விஜயம் செய்து வியாபாரிகளையும் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார். ஐக்கிய மக்கள் சக்தியின் பேருவளை முக்கியஸ்தர் இபாம் ஹனபியின் இல்லத்தில் அவர் கட்சி முக்கியஸ்தர்களையும் சந்தித்ததோடு இந்நிகழ்வில் பேருவளை நகர சபை எதிர்க்கட்சித் தலைவர் ஹஸன் பாஸியும் கலந்து கொண்டார். பேருவளை நகர சபையை இம்முறை வெற்றி பெறச் செய்ய மூவின மக்களும் ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் அணி திரண்டுள்ளமை குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 பெப்ரவரி 7 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN

**தொழுகை நேரம்**

10 முதல் 13 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 05.04 |
| லுஹர் | 12.22 |
| அஸர் | 03.38 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.32 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் சித்திரை 5

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



# உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு நிதி வழங்குவது சிரமமான விடயம்

### திறைசேரியிடம் போதிய நிதி இல்லை என அரச அதிகாரி தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தேவையான பணத்தை வழங்குவது மிகவும் சிரமமான விடயமென அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். திறைசேரியிடம் போதிய நிதியின்மையே இதற்கான காரணமென அவர் கூறியுள்ளார்.

தற்போது சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் நிலவும் நிதி நெருக்கடி, இதில் பாரிய தாக்கத்தை செலுத்தியுள்ளதாக குறித்த பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் தேவைக்கேற்றவாறு நிதியை விடுவிப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்கவிடம் வினவிய போது, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என்பது அரசியலமைப்பினூடாக உறுதிப்படுத்தப்பட்ட கடமை என்பதால், பகுதி பகுதியாகவேனும் நிதி வழங்கப்படுமென நிதி அமைச்சு ஏற்கனவே தெரிவித்துள்ளதாக கூறினார்.

அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படுமென தாம் நம்புவதாகவும் சமன் ஸ்ரீ ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.

# பாதிக்கப்பட்ட பயிர்செய்கைகளுக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டஈடு

### விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதி சபைக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை



லோரன்ஸ் செல்வநாயகம்

கடும் மழை காரணமாக பயிர்ச்செய்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்குமானால் உடனடியாக அது தொடர்பில் கமத்தொழில் சேவை மத்திய நிலையத்திற்கு அறிவிக்குமாறு விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதி சபை விவசாய சமூகத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மழை காரணமாக சில மாவட்டங்களில் பயிர்ச்செய்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல் கிடைத்து வருவதாகவும் அதுதொடர்பில் கவனம் செலுத்தி பாதிப்புகளுக்கான நட்டஈடு தொடர்பில் அறிக்கைகளைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதி சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கிணங்கவே அந்த காப்புறுதி சபை விவசாயிகளுக்கு மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளது.

பயிர்ச்செய்கைகள் பாதிப்புக்கான நட்டஈடாக ஒரு ஹெக்டேயருக்கு ஒரு இலட்சம் ரூபா வீதம் நட்டஈடு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் மேற்படி காப்புறுதி சபையானது அரசாங்கத்தின் நடுநிலை கண்காணிப்பின் கீழ் நட்டஈட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

# ஜி.எல்.பீரிஸ், டலஸ் ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை

### பொதுஜன பெரமுன செயலாளர்

லோரன்ஸ் செல்வநாயகம்

பொதுஜன பெரமுனவிலிருந்து விலகிச் சென்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட தரப்பினர் தொடர்பில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளுக்கான சட்ட ஆலோசனை பெறப்பட்டு வருவதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

04

# புத்தளம் இஸ்லாஹிய்யாவில் சுதந்திர தினம் அனுஷ்டிப்பு

புத்தளம் தினகரன் நிருபர்



இலங்கையின் 75 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு புத்தளம் இஸ்லாஹிய்யா மகளிர் கல்லூரியிலும் சுதந்திர தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எம்.எச்.எம். முனீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரி அதிபர் ஐ.ஏ. நஜீம், புத்தளம் சாஹிரா ஆரம்ப பாடசாலை அதிபர் ஏ.எம். ஜவாத் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். கல்லூரி விரிவுரையாளர்களும் இதில் கலந்துகொண்டனர்.

சாஹிரா ஆரம்ப பாடசாலை அதிபர் ஏ.எம். ஜவாத் இலங்கையின் சுதந்திர தின வரலாற்றினை நினைவு கூர்ந்து சிறப்புரையாற்றினார்.

அதிபரினால் தேசிய கொடி ஏற்றப்பட்டு, மாணவியர் குழுவினரால் தேசிய மொழியில் தேசிய கீதமும் இசைக்கப்பட்டது.

# சுங்க மோசடிகள் தொடர்பில் தகவல்களை வழங்கினால் பணமாக சன்மானம்

### தகவல்களை அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கம்; சுங்கப் புலனாய்வு பிரிவு தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடவடிக்கைகளின் போது ஏற்பட்ட அனைத்து சுங்க மோசடிகள் தொடர்பில் சரியான தகவல்களை வழங்கும் எந்தவொரு நபருக்கும் சன்மானமாக பணம் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் மத்திய புலனாய்வுப் பிரிவு உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க, தடைசெய்யப்பட்ட மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள், உரிய சுங்க வரியை செலுத்தாத பொருட்கள் சட்டவிரோத மதுபானம், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் தொல்பொருள் பெறுமதிமிக்க பொருட்கள் ஆகியன தொடர்பிலான சுங்க மோசடி தொடர்பில் சரியான தகவல்கள் வழங்குவோருக்கே அவ்வாறு சன்மானம் வழங்கப்படுமென்று அவர் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பான தகவல்களை வழங்குவதற்காக சுங்கத் திணைக்களத்தின் கீழ் 24 மணித்தியாலங்களும் செயற்படும் வகையில் 0112471471 என்ற தொலைபேசி இலக்கம் வழங்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தகவல்களை வழங்கும் அனைவரினதும் தனிப்பட்ட மற்றும் ரகசியத் தன்மை பாதுகாக்கப்படும் என்றும் அரசாங்கத்திற்கான வருமானத்தைப் பாதுகாத்தல் மற்றும் சமூக பாதுகாப்புக்காக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

# பொதுமக்கள் மீது பாரிய வரிச்சுமை

### எதிராக நாளை தொழிற்சங்க போராட்டம் -லெஸ்லி தேவேந்திரா

அஷ்ரப் ஏ சமத்



நாட்டில் தற்போது என்றுமில்லாதவாறு பொது மக்கள் மீது பாரிய வரிகளை அரசாங்கம் சுமத்தியுள்ளது. இதனை மக்கள் தாங்கிக் கொள்ளாத அளவுக்கு சொல்லொண்ணாத் துன்பங்களையும் அவலங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர். இதனை அரசாங்கத்திடம் வலியுறுத்தும் நோக்கிலே இலங்கை சுதந்திர தொழிலாளர்கள் சங்கம் தொழிலாளர்களை இணைத்துக் கொண்டு நாளை 08ஆம் திகதி கொழும்பில் பாரியதொரு ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடாத்தவுள்ளதாக இலங்கை சுதந்திர தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் தேசபந்து லெஸ்லி தேவேந்திரா தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர்கள் சங்கத்தின் செயலாளர் தலைமையில் ராஜகிரியவில் உள்ள தொழிலாளர்கள் சங்கத்தின் தலைமைக் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ் ஊடக மாநாட்டில் லேக்ஹவுஸ் சுதந்திர தொழிலாளர் சங்கத்தின் தலைவர் அனுர கொடகந்த. எயார்லங்கா ஜகத் விஜேவர்த்தன. பெற்றோலியம், இலங்கை மின்சார சபை, நீர்விநியோக வடிகாலமைப்புச் சபை, போன்ற அரச நிறுவனங்களின் தொழிற்சங்கத்தின் தலைவர்கள் ,செயலாளர்களும் இவ் ஊடக மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துக்களை தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த செயலாளர் லெஸ்லி தேவேந்திரா,

மின்சார சபை தமது வாடிக்கையாளர்கள் மீது நூற்றுக்கு 70 வீதத்திலிருந்து 200 வீதம் வரை மின்சாரக் கட்டணத்தினை அதிகரித்துள்ளது. அதேபோன்றுதான் நீர் விநியோகம், பெற்றோலியம், சமையல் எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கும் நாளுக்கு நாள் வரியைக் அதிகரித்து விலைகளையும் அதிகரித்துள்ளது. இதனால் மக்கள் இந்த நாட்டில் அன்றாடம் வாழமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மின்சார சபையை பல்வேறு நாடுகளுக்கும் விற்று அதனை அவர்கள் எதிர்பார்த்த இலாபத்தினைப் பெற்றுக் கொள்ளவே பாரிய மின்சார பாவனை அதிகரிப்பினை மக்கள் தலைமீது சுமத்தியுள்ளது. இலங்கை மின்சார சபையின் தலைவருக்கு ஓய்வு பெற்ற இரண்டு பொது முகாமையாளர்கள் இருவர் ஆலோசகர்களாக உள்ளனர். இவர்கள் மாதாந்தம் 6 இலட்சம் ருபா சம்பளம் பெறுகின்றனர். ஆகவேதான் தொழிற்சங்கங்கள் அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கே ஒன்றிணையவுள்ளளோம். நாட்டில் உள்ள சகல அதிகார சபைகள், கூட்டுத்தாபனங்களது சுதந்திர தொழிலாளர்கள் சங்கங்கள் நாளை 08ஆம் திகதி புறக்கோட்டையில் பாரிய தொழிற்சங்க போராட்டமொன்றை நடாத்தவுள்ளதாகவும் தொழிற்சங்க பிரதிநிதிகள் இங்கு கருத்துத் தெரிவித்தனர்.

# கேஸ் விலை அதிகரிக்கப்பட்டாலும் உணவுப் பொருட்களின் விலைகளில் அதிகரிப்பில்லை

### சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டாலும் பாண் உட்பட பேக்கரி உற்பத்திப் பொருட்களுக்கான விலைகளை அதிகரிக்கப் போவதில்லையென சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சமையல் எரிவாயுவின் விலை 334 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையிலும் உணவகங்களில் எந்தவொரு உணவுப் பொருளுக்கும் விலையதிகரிப்பை மேற்கொள்ளப்போவதில்லை என சங்கம் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அன்றாட உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கே மக்கள் கஷ்டப்படும் நிலையில் நாம் அடையும் நட்டத்தை மக்களுக்கான சலுகையாக வழங்குவதே எமது நோக்கம் என்றும் அந்த சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

04

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.02.05
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5022 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 24,336,404.00
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 0 5 4 2 7 1

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1052 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 82,042,982.40
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 16 22 53 66

ராசி சுப பலன் (Handahana) — சீட்டிழுப்பு இலக்கம் 331 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,509,905.40
வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 08 49 54 59 — விசேட இலக்கினம் துலாம்

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1477 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,151,502.40
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 0 2 9 1 3 9

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1370 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 298,133,318.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து R — சுப்பர் இலக்கம் 10 — வெற்றி இலக்கங்கள் 11 53 56 70

கொவிசெத (Govisetha) — சீட்டிழுப்பு இலக்கம் 3264 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 76,638,076.80
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 01 12 46 77

### பரீட்சைக் காலத்தில் மின் துண்டிப்பு

# பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் மனு மீதான விசாரணை நாளை

லோரன்ஸ் செல்வநாயகம்

கல்வி பொதுத் தராதர உயர்தரப்பரீட்சை நடைபெறும் காலத்தில் மின்துண்டிப்பை மேற்கொள்வதைத் தடுக்குமாறு உத்தரவு பிறப்பிக்கக் கோரி பொது பயன்பாட்டு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணையை நாளை 8ம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மேற்படி மனுமீதான விசாரணை நேற்றைய தினம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளாக யோகித்த ராஜகருணா, தம்மிக்க கனேபொல ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே நாளை 8ம் திகதி அந்த விசாரணையை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அன்றைய தினம் வழக்குடன் சம்பந்தப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நீதிமன்றம் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

பகிரங்க ஏலவிற்பனை

மல்டி ஃபைனான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | முகவரி |
|---|---|
| 24 பிப்ரவரி 2023 | இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 24 பிப்ரவரி 2023 | இல. 56, சந்தை இடம், அனுராதபுரம். |
| 24 பிப்ரவரி 2023 | இல. 16, கோர்ட் ரோடு, கம்பஹா. |
| 24 பிப்ரவரி 2023 | இல. 44, ஹில்ஸ் ஸ்ட்ரீட், கண்டி. |
| 24 பிப்ரவரி 2023 | இல. 74/76, கண்டி வீதி, குருநாகல். |
| 24 பிப்ரவரி 2023 | இல. 72, சிமன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10. |
| 24 பிப்ரவரி 2023 | இல. 134, அனகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 24 பிப்ரவரி 2023 | இல. 207, பிரதான வீதி, இரத்தினபுரி. |

மல்டி ஃபைனான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE
இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 | கட்டார் ரியால் | 50.73 |
| குவைத் டினார் | 603.09 | சவூதி ரியால் | 49.54 |
| ஓமான் ரியால் | 483.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

## பதிவு செய்யப்படாது...

தனியார் வைத்தியசாலைகள் உள்ளிட்ட சுமார் 1500 நிறுவனங்கள் இதுவரை சட்டரீதியாக பதிவுகளை மேற்கொண்டுள்ளன எனத் தெரிவித்துள்ள அவர் www.phsrc.lk இணையத்தளத்தின் மூலம் ஒன்லைன் முறைமையில் அத்தகைய நிறுவனங்களை பதிவுசெய்ய முடியுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை, நாடளாவிய ரீதியில் உள்ள தனியார் சுகாதார நிறுவனங்களிலுள்ள மருத்துவ உபகரணங்கள், மனித வளம் ஆகியவை தகுதியானவையா என்பது தொடர்பில் ஆராய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். தனியார் வைத்தியசாலைகள், நேர்சிங்கோம், தனியார் இரசாயன கூடங்கள், பற்சிகிச்சை நிலையங்கள் ஆகியவை 11ஆவது பிரிவுடன் தொடர்புபட்டு செயற்பட்டு வருவதாகவும் அவை ஒழுங்குபடுத்தலின்றி செயற்படுவதால் நாட்டிலுள்ள நோயாளிகள் பெரும் அநீதிகளுக்கு உட்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஜி.எல்.பீரிஸ், டலஸ்... (03 ஆம் பக்கத் தொடர்)

கட்சியின் தலைவர் இல்லாத காரணத்தினால் கட்சிக்கு எந்தப் பாதிப்பும் கிடையாது என தெரிவித்துள்ள அவர், கட்சியை வெற்றிபெறச் செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன தேர்தலுக்கான வேலைத்திட்டங்களை தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக தெரிவிக்கும் அவர், வாக்குப்பெட்டி எண்ணப்படும் போது யார் வெற்றி பெற்றுள்ளார்கள் என்பது தெரியவரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கேஸ் விலை... (03 ஆம் பக்கத் தொடர்)

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் லிற்றோ கேஸ் எரிவாயுவின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் நேற்று கூடி அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதன் பின்னரே நுகர்வோரின் நலன் கருதி மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உயர் நீதிமன்ற நீதியரசர்...

புதிய தலைவராக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

அத்துடன், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னாள் தலைவர் நீதியரசர் கே.பி.பெர்னாண்டோ உயர் நீதிமன்ற நீதியரசராக ஜனாதிபதி மாளிகையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். இதனிடையே, மேல்நீதிமன்ற நீதிபதி எம்.ஏ.ஆர். மரிக்கார், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

இந்நிகழ்வில் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## சீன வங்கியின்...

அல் ஜசீராவிற்கு கருத்து தெரிவிக்கையில் இதனை குறிப்பிட்டுள்ள அவர், 2.9 பில்லியன் கடனுதவியை இலங்கைக்கு வழங்குவதற்காக சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கின்ற உத்தரவாதத்தினை கருத்தில் கொள்ளும் சீனாவின் வங்கி குறைவாகவே வழங்கியுள்ளது என தெரிவித்துள்ளார்.

இது இரண்டுவிதமான நிலைப்பாடுகள். சீனர்கள் ஏதோ சொல்கின்றார்கள் ஆனால், சர்வதேச நாணய நிதியம் வித்தியாசமான முயற்சியை விரும்புகின்றது எனவும் அலிசப்ரி தெரிவித்துள்ளார். மார்ச் 31 ம் திகதிக்கு முன்னர் சீனாவின் உத்தரவாதமும் சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதியும் கிடைப்பது அவசியம் என தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர், இல்லாவிட்டால் நிலைமை மோசமடையலாம் என சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும்அரசாங்கம் சீர்திருத்தங்களை தொடர்ந்தால் இலங்கை மக்கள் அமைப்பு முறை மீது தொடர்ந்தும் நம்பிக்கையை வெளிப்படுத்தினால் வங்கிகள் ஊடாக பண பரிவர்த்தனையில் ஈடுபட்டால் மார்ச் 31ம் திகதிக்கு பின்னர் தட்டுப்பாடுகள் உருவாகலாம் என தான் கருதவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வருமான சேகரிப்பு மற்றும் ஏனைய சீர்திருத்தங்கள் குறித்து தான் விதித்த முன்நிபந்தனைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் விதம் குறித்து சர்வதேச நாணய நிதியம் திருப்தியடைந்துள்ளது எனவும் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

## முட்டைகளுக்கான...

முட்டைக்கான கட்டுப்பட்டு விலையை விதித்து கடந்த ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பை செல்லுபடியற்றதாகக் கோரி முட்டை உற்பத்தியாளர் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த விசாரணை நேற்று இடம்பெற்றதுடன், அதன்போது நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை சார்பில் ஆஜராகியிருந்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தன அதனை நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார். அதற்கிணங்க புதிய கட்டுப்பாட்டு விலையின்படி வெள்ளை முட்டை 44 ரூபாவும், சிவப்பு முட்டை 46.00 ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கு கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் இதன்போது தெரிவித்துள்ளார்.

அந்த கோரிக்கை தொடர்பில் திருப்தியடைவதாக நீதிமன்றத்தில் தெரிவித்துள்ள மனுதாரர் தரப்பு, தமது மனுவை வாபஸ் வாங்க தயாரென்றும் தெரிவித்துள்ளது. அதன்போது மேலும் விடயங்களை முன்வைத்த மேலதிக சொலிசிட்ட ஜெனரல் கடந்த ஆகஸ்ட் மாதம் நுகர்போர் பாதுகாப்பு அதிகார சபையினால் விதிக்கப்பட்ட முட்டைக்கான கட்டுப்பாட்டு விலை தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானியை நீதிமன்றம் இடைநிறுத்தியதால் முட்டை உற்பத்தியாளர்கள் 20 மில்லியனுக்கு மேற்பட்ட மேலதிக வருமானத்தை பெற்றுக்கொண்டுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளார். அதனையடுத்து மேற்படி மனுவை வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் வழக்கு பணத்தின் கீழ் அந்த வேண்டுகோளுக்கு இடமளிக்குமாறும் அவர் நீதிமன்றத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

எவ்வாறெனினும் அந்த வேண்டுகோள் தொடர்பான விசாரணையை மார்ச் 30ம் திகதி நடத்துவதற்கு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

## யுவதி ஒருவர்...

முன் மர்மமான முறையில் உயிரிழந்துள்ள கோடீஸ்வர வர்த்தகரான ரொஹான் வன்னிநாயக்கவின் மரண பரிசோதனை நேற்று இடம்பெற்றுள்ளதுடன் நீதிமன்ற மருத்துவ அதிகாரியினால் நேற்று மரண பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் DNA பரிசோதனை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மரண பரிசோதனையை கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் அவரது சடலம் நீரில் மூழ்கி உருவம் சீர்குலைந்து காணப்பட்டதால் அவரது உறவினர்களால் அவரை உடனடியாக அடையாளம் காண முடியாத நிலையிலேயே நேற்றைய தினத்திற்கு மரண பரிசோதனை ஒத்திப்போடப்பட்டது.

இந்த படுகொலையுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபரான யுவதி கந்தானை பிரதேசத்தில் வைத்து கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகளினால் நேற்றுமுன்தினம் (5) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

27 வயதுடைய ஒருவரும் 23 வயதுடைய யுவதியொருவரும் அவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் நாரஹேன்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களென்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் நாட்டிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக இதற்கு முன்னர் சந்தேகம் எழுந்திருந்த நிலையில் அவர்களின் அந்த முயற்சி பயனற்றுப் போனதாக பின்னர் தெரியவந்துள்ளது. சந்தேகநபர்கள் இருவரும் கடுவலை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர்கள் இருவரையும் இரண்டு தினங்கள் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ள தடுத்துவைப்பு உத்தரவை பெற்றுக்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## இரட்டை பிரஜாவுரிமை...

நீதிமன்றத்தின் உதவியை நாட நேரிடும் என பெப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி அதுதொடர்பில் தெரிவிக்கையில், மேற்படி தகவல்களை பெற்றுக்கொள்வது தொடர்பில் தகவல் அறியும் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டிலும் வினவப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி விபரங்களை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் தமது நிலைப்பாட்டை இரண்டு வாரங்களுக்குள் வெளியிடுவதாக அந்த ஆணைக்குழுவினால் குடிவரவு குடியகல்வு தகவல் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் அந்த அதிகாரி வழங்கும் பதிலுக்கு அமையவே அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளமுடியுமென பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டவர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பது நாட்டின் எதிர்காலத்திற்கு நன்மை பயக்காது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பான் கீ மூனுக்கு...

சில நாட்களில் இலங்கை வந்து, தமிழினம் எதிர்கொண்ட போரழிவுகளை பார்த்து விட்டு நாடு திரும்பும் போது அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுகள் நடத்தி இருவரும் சேர்ந்து வெளியிட்ட கூட்டறிக்கையை அவர் ஞாபகப்படுத்த வேண்டுமென கோருகிறேன்.

மே 24, 2009 அன்று வெளியிடப்பட்ட அந்த கூட்டறிக்கையில் அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தான் தமிழ் கட்சிகளுடன் பேச்சு நடத்தி 13ஐ அமுல் செய்து அதை மென்மேலும் மேம்படுத்த (13+) உடன்படுவதாகவும் அதேபோல் சர்வதேச மனித உரிமை நியமங்களை ஏற்று இலங்கையில் கடைப் பிடிப்பதாகவும் உலக மன்றமான ஐ.நாவுக்கு அதன் பிரதான நிறைவேற்று அதிகாரியான ஐ.நா செயலாளர் பாங் கீ மூன் என்ற தனக்கு உறுதி யளித்ததை இன்றைய அரசின் பிரதான கட்சியான பொதுஜன முன்னணியின் அதிகாரபூர்வ தலைவரான மகிந்த ராஜபக்ஷவுக்கும் அவரது எம்பிகளுக்கும் இவர்களின் பின்னால் இன்னமும் நிற்கும் சில பௌத்த பிக்குகளுக்கும் ஞாபகப் படுத்த வேண்டும் என்றும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மனோ கணேசன் எம்பி மேலும் கூறியதாவது,

இன்று பொறுப்பை நிறைவேற்றாது தவறு செய்து, குற்றவாளிக் கூண்டில் நிற்பது அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மட்டுமல்ல. ஒட்டு மொத்த ஐநா அமைப்பும்தான் என நான் நம்புகிறேன். இவர்கள் அனைவரும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டும்.

பாங் கீ மூன் – மகிந்த கூட்டறிக்கையில் கையெழுத்து இட்ட ஒரு தரப்பு வார்த்தை தவறுமானால் அடுத்த தரப்பு அதை தட்டிக்கேட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் பெயர்தான் கூட்டறிக்கை. ஆனால், அதை ஐநா செய்யவில்லை.

அது மட்டுமல்ல, போர் நிகழ்ந்த போது, வன்னியில் இருந்த ஐ.நா அலுவலகத்தை இலங்கை அரசு சொன்னது என்பதற்காக மூடி விட்டு நாட்டை விட்டு வெளியேறிய அன்றைய ஐ.நாவின் முடிவுக்கு முன்னாள் ஐநா செயலாளர் பாங் கீ மூன் பொறுப்பேற்க வேண்டும்.

அதனால்தான், இலங்கையின் இறுதி யுத்தம், சாட்சியமில்லா யுத்தமாக நிகழ்ந்தது. இன்று போர் முடிந்து ஏறக்குறைய 14ம் ஆண்டுகள் ஓடுகின்றன. முன்னாள் ஐநா செயலாளர் இலங்கை போர் தொடர்பில் அன்று உலக மாமன்றமான ஐநா சபை விட்ட தவறை இன்றாவது ஏற்றுக் கொள்ள வேண்டும். இன்று அவர் அதிகாரத்தில் இல்லாவிட்டாலும் கூட அவர் அதைப் பற்றி பேச வேண்டும். அது உலக அளவில் எடுபடும். அன்று இலங்கை யுத்தம் தொடர்பாக ஐ.நா விட்ட தவறு தொடர்பில் அன்றே ஐ.நா சபைக்குள் ஒரு உள்ளக அறிக்கை தயார் செய்யப்பட்டதை நான் அறிவேன். அது பற்றி, முன்னாள் ஐ.நா செயலாளர் பான் கீ மூன் இனியாவது பகிரங்கமாக பேச வேண்டும். இலங்கையின் ஊடகவியலார்கள் பான் கீ மூனை கண்டு இது பற்றி கேள்வி எழுப்ப வேண்டும். இலங்கை வந்துள்ள முன்னாள் ஐ.நா செயலாளர் பான் கீ மூன் சந்திக்கும் நபர்களின் நிகழ்ச்சி நிரலில் நான் இல்லை. நான் அவரைக் கண்டால் இதை அவர் முகத்துக்கே சொல்லி கேட்க விரும்புகிறேன் என்றும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

## துருக்கியை நேற்று...

பூகோளவியல் அளவை திணைக்களம் தெரிவித்துள்ளது. உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை 4.17 மணியளவில் இப்பூகம்பம் ஏற்பட்டது. அவ்வேளையில் பெரும்பாலான மக்கள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தனர்.

உயிர்தப்பிய பலர், அதிர்ச்சியுடன் வீடுகளிலிருந்து வெளியே ஓடி, பனிபடர்ந்த வீதிகளில் திரண்டிருந்தனர். சைப்பிரஸ் தீவு மற்றும் ஈராக்கிலும் இப்பூகம்பத்தின் அதிர்வுகள் உணரப்பட்டுள்ளன.

இப்பூகம்பத்தினால் குறைந்தபட்சம் 1,500 பேர் உயிரிழந்துள்ளதாக நேற்றுவரை கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. துருக்கியில் குறைந்தபட்சம் 912 பேரும், சிரியாவில் குறைந்தபட்சம் 560 பேரும் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழப்புகள் இதனை விட அதிகமாக இருக்கலாமென்று தெரிவிக்கப்படுகின்றது.

சிரியாவில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் 326 பேர் உயிரிழந்துள்ளதுடன் 1,089 பேர் காயமடைந்துள்ளனர் என சிரிய அரசாங்கம் தெரிவித்துள்ளது. சிரியாவில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டுப் பகுதியில் 221 பேர் உயிரிழந்துள்ளதுடன், 419 பேர் காயமடைந்துள்ளனர் என மீட்புப் பணியில் ஈடுபடும் குழு தெரிவித்துள்ளது.

துருக்கியின் மல்தாயா மாகாணத்தில் 13 ஆம் நூற்றாண்டில் நிர்மாணிக்கப்பட்ட பிரசித்தி பெற்ற பள்ளிவாசலொன்று பகுதியளவில் உடைந்துள்ளது. அங்கு 28 குடியிருப்புகளைக் கொண்ட 14 மாடி கட்டடமொன்றும் இடிந்து வீழ்ந்தது.

தியார்பாகிர் நகரில் இடிபாடுகளுக்குள்ளிருந்து குரல்கள் கேட்பதாகவும் சுமார் 200 பேர் இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் எனவும் மீட்புப் பணியில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா ஆகியன துருக்கிக்கு அனுதாபங்களைத் தெரிவித்துள்ளதுடன், உதவிகளை அனுப்புவதாக அறிவித்துள்ளன. துருக்கியின் பரம வைரியான கிறீஸும் உதவுவதற்கு முன்வந்துள்ளது.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரேனின் ஜனாதிபதி வொலோடிமிர் ஸேலேன்ஸ்கியும், துருக்கிக்கு அவசியமான உதவிகளை வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

துருக்கியின் தொழில்நகரான காசியான்டேப் நகரில் ஏற்பட்ட பூகம்பம் துருக்கியையும், சிரியாவையும் நிலைகுலைய வைத்துள்ளது.

காசியான்டேப் நகரம் சிரிய நாட்டின் எல்லையை ஒட்டி அமைந்துள்ளது. அதனால் துருக்கி, சிரியா என இரண்டு நாடுகளுமே மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. துருக்கியில் உயிரிழப்புகள் அதிகமாக உள்ளன.

உலகின் ஆபத்துள்ள பூகம்ப மண்டலங்களில் துருக்கியும் ஒன்று. 1999ஆம் ஆண்டு துருக்கியின் டுஸ்ஸே நகரில் 7.4 ரிக்டர் அளவில் ஒரு பூகம்பம் ஏற்பட்டது.

அதில் சுமார் 17 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். துருக்கி வரலாற்றில் தற்போதுவரை அதுதான் மோசமான பூகம்பமாக அறியப்படுகிறது. அதன் பின்னர் 2020, 2022 ஆம் ஆண்டுகளிலும் சக்திவாய்ந்த பூகம்பங்கள் அங்கு ஏற்பட்டன.

துருக்கு மற்றும் சிரியாவில் வீதிகள் எங்கும் கட்டட இடிபாடுகளும் மரண ஓலங்களுமே நிறைந்திருக்கின்றன.

அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், துருக்கியில் நிறைய கட்டடங்கள் வலுவற்ற கட்டுமான பொருட்களால் கட்டமைக்கப்பட்டுள்ளதாலேயே சேதம் அதிகமாக இருக்கிறது என்று தெரிவித்துள்ளது.

பூகம்பம் குறித்து துருக்கி ஜனாதிபதி எர்டோகன் கூறும்போது "நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மீட்புக் குழுக்கள் உடனடியாக அனுப்பப்பட்டன. இந்த பேரழிவை நாங்கள் கூடிய விரைவில் கடந்து செல்வோம் நம்புகிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

துருக்கி, சிரியா பூகம்பங்களைத் தொடர்ந்து இந்தியா மீட்புப் படையையும், நிவாரணப் பொருட்களையும் அனுப்பி வைக்கிறது. துருக்கி மக்களுக்கு தேவையான உதவிகளை செய்யத் தயாராக இருப்பதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது.

துருக்கியில் இடிந்த கட்டடங்களில் மருத்துவமனைகளும் அடங்குகின்றன.

அதனால் மீட்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உயர்தர சிகிச்சை அளிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அதேபோல் அங்கு கடுமையான பனிப்பொழிவு நிலவுவதால் மீட்புப் பணிகளையும் முழுவீச்சில் செய்யமுடியாத சூழல் உள்ளது.

## 09ஆவது பாராளுமன்றத்தின் ...

08ஆம் திகதி வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இது தொடர்பான ஒத்திகை பாராளுமன்ற வளாகத்தில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்றதுடன், கோட்டே ஜனாதிபதி மகளிர் கல்லூரி மாணவியர் உள்ளிட்ட பலர் இந்த ஒத்திகையில் பங்கேற்றனர்.

அரசியலமைப்பின் 33வது உறுப்புரையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை காலை 10.00 மணிக்கு பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை முன்வைக்கவுள்ளார்.

ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு வருகைதரும் நிகழ்வை மிகவும் எளிமையான முறையில் நடத்துமாறு அவர் வழங்கிய ஆலோசனைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கமைய மரியாதை வேட்டுக்கள் தீர்த்தல் மற்றும் வாகனத் தொடரணி என்பன இடம்பெறாது என பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாந்து தெரிவித்தார்.

நாளைய தினம் மு.ப. 09.15 மணிக்குள் விசேட விருந்தினர்களுக்கு தங்கள் இருக்கைகளில் அமருமாறு கோரப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் அவருடைய பாரியாரின் வருகையைத் தொடர்ந்து, பிரதமர் தினேஷ் குணவர்தனவின் வருகையும், அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முதற்பெண்மணியின் வருகையும் இடம்பெறவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக பாராளுமன்ற கட்டடத்தின் பிரதான நுழைவாயிலின் படிக்கட்டுக்கு அருகில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வரவேற்பார்கள்.

படைக்கலசேவிதர், பிரதி படைக்கல சேவிதர் மற்றும் உதவி படைக்கல சேவிதர் ஆகியோர் முன்செல்ல சபாநாயகர், பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோரினால் ஜனாதிபதி பாராளுமன்ற கட்டடத்துக்குள் அழைத்துச் செல்லப்படுவார்.

பாராளுமன்றத்தின் பிரதான நுழைவாயிலுக்கு அருகே கோட்டே ஜனாதிபதி மகளிர் கல்லூரி மாணவியர் ஜயமங்கல கீதம் இசைக்கவுள்ளனர்.

இதன் பின்னர் உடையணி அறைக்கு அழைத்துச் செல்லப்படவுள்ள ஜனாதிபதி மு.ப 9.55 மணிவரை அங்கிருப்பதுடன், அதனைத் தொடர்ந்து பாரம்பரியத்துக்கு அமையப் பிரதிப் படைக்கல சேவிதர், செங்கோலைக் கையில் தாங்கியவாறு படைக்கல சேவிதர், ஜனாதிபதி, சபாநாயகர், செயலாளர் குழு மற்றும் உதவிப் படைக்கல சேவிதர் என்ற வரிசைப்படி அணிவகுத்து சபா மண்டபத்துக்குள் செல்வர்.

சபைக்குள் நுழையும்போது உதவி படைக்கல சேவிதர் ‘கௌரவ ஜனாதிபதி’ எனத் தெரிவித்ததும் ஆளும் கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமது ஆசனங்களிலிருந்து எழுந்து நிற்பது பாரம்பரியமாக இடம்பெறும். சபா மண்டபத்துக்கு அழைத்து வரப்படும் ஜனாதிபதி அங்கிராசனத்தில் அமர்ந்து சபைக்குத் தலைமை தாங்குவார்.

## 80,000 பேரில்...

வாடகைக்கு விட்டமை மற்றும் முறையற்ற விதத்தில் ஒப்பந்தங்களை வழங்கியதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இந்நிலையில் அரச சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை, தரமற்ற பாதைகளை நிர்மாணித்தமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## செப்டம்பர் வரை...

செய்திருந்த அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் அப்துல் மோமென் தெரிவித்துள்ளார்.

நாட்டின் 75ஆவது சுதந்திரதின நிகழ்வில் பங்கேற்பதற்கான இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும்

சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். அதனையடுத்து

ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்திருந்த போதே மேற்படி கால அவகாசம் தொடர்பான விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

இக்கட்டான காலகட்டம் ஒன்றில் பங்களாதேஷ் இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பில் இலங்கை அரசாங்கம் நன்றி தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர், எவ்வாறாயினும் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள கடனை மீள செலுத்துவதற்கான இறுதி கால அவகாசமாகவே இது அமையும் என்று அவர்

குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு நிதி மாற்ற நடவடிக்கையின் கீழ் 2021ம் ஆண்டு பங்களாதேஷ்

அரசாங்கம் 200 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு கடனாக

வழங்கியிருந்தது. அதற்காகவே மேலதிகமாக மேலும் 6 மாத கால அவகாசத்தை பங்களாதேஷ் இலங்கைக்கு வழங்கியுள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக மேலும் ஒரு கால அவகாசத்தைப் பெற்றுத்தருமாறு இலங்கை அரசாங்கம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவே செப்டெம்பர் மாதம் வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக பங்களதேஷ் வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 13 ஆவது திருத்தும்...

என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது. அதிகாரப் பகிர்வை நிச்சயமாக எதிர்க்கவில்லை என்றாலும் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்ச்சி நிரலுக்கு எக்காரணம் கொண்டும் ஆதரவளிக்க முடியாது என கூறியுள்ளது. 13 ஆவது திருத்தம் குறித்த கேள்விக்கு பதிலளிக்கும் போதே அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 7 ஜனாதிபதிகளும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்குவதை ஏன் தவிர்த்தார்கள் என்பதை முதலில் ஆராய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இதேநேரம், மொழி மற்றும் மதத்தின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்பட்டால், மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

## லாப்ஸ் எரிவாயுவின்...

சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 200 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக லாப் கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க அதன் புதிய விலை 5280 ரூபாவாகும்.

அத்துடன் 5 கிலோ கிராம் எடை கொண்ட லாப் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 80 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 2112 ரூபா ஆகும். அத்துடன் இரண்டு கிலோ கிராம் எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 32 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 845 ரூபாவாகும்.

இந்த விலையதிகரிப்பு நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருவதாக லாப் கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. உலகச் சந்தையில் சமையல் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ள நிலையிலேயே உள்நாட்டிலும் அதன் விலைகள் அதிகரிக்கப்படுவதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

## அடிப்படை உரிமை...

கோரி, இலங்கை ஆசிரியர் சங்கம் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மனு மீதான விசாரணையை எதிர்வரும் ஜூலை 14ம் திகதி நடத்துவதற்கு உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மேற்படி மனு மீதான விசாரணை நேற்றைய தினம் நீதிபதிகளான பிரியந்த ஜயவர்தன, அச்செல வெங்கப்புலி மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இடம்பெற்றது. அதன்போதே மேற்படி மனுமீதான விசாரணையை எதிர்வரும் 14ம்திகதி

முன்னெடுப்பதற்கு தீர்மனிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மேற்படி மனுவில் பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைகள் ஆணையாளருக்கு மீண்டும் அழைப்பாணையை விடுக்குமாறும் நீதிமன்றத்தில் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் பிரதிவாதிகளாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சின் செயலாளர், மின்சார சபையின் தலைவர், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர், இலங்கை மனித உரிமை ஆணைக்குழு உறுப்பினர் உள்ளிட்டவர்கள் பெயரிடப்பட்டுள்ளனர்.

## தந்தை, இரு பிள்ளைகள் ...

பதிவாகியுள்ளதாக அரநாயக்க பொலிஸார் தெரிவித்துள்ளனர். அரநாயக்க பொல் அபேகொட பிரதேசத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் 9 வயது சிறுமியான திரித்மி கருணாராச்சி மற்றும் 6 வயது தெனுவத் கருணாராச்சி ஆகிய இருவரே தமது தந்தையால் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். குடும்ப தகராறு காரணமாகவே இந்த சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என தெரிவிக்கும் பொலிஸார், இரண்டு பிள்ளைகளையும் வெட்டிக் கொலை செய்துள்ள இளம் தந்தையான 33 வயது வசந்த கருணாரச்சி தாமும் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துள்ளார்.

கொடிகமுவ, அம்பலத்தில் தூக்கிட்ட நிலையில் அவரது சடலத்தை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தமிழ் கட்சிகளை...

மையுடன் இருப்பதையே இந்தியா விரும்புகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அண்மையில் இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெயசங்கர் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். அவர் இலங்கை அரசியலில் நீண்டகால அனுபவம் பெற்றவர் எனவும் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். அவர் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை ஒருமித்தே சந்தித்திருந்தார் எனவும் மாவை குறிப்பிட்டுள்ளார். தமிழ் தேசிய கட்சிகள் இலங்கையிலும் சர்வதேசத்திலும் சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டி கட்டமைப்பில் அரசியல் தீர்வொன்று எட்டப்பட வேண்டும் என்று ஒருமித்து கோரிக்கை முன்வைத்துவரும் நிலையில் தான் ஜெய்சங்கரும் அக்கட்சிகளின் தலைவர்களை ஒருமித்து சந்தித்துள்ளார்.

அதிகாரங்கள் பகிரப்பட்டு, அவை மீள எடுக்கப்படாத வகையில், இந்தியாவிலுள்ள அரசியல் அமைப்பை போன்று இலங்கையிலும் உருவாக்கப்பட வேண்டும் என்பதே தமிழ் தேசிய கட்சிகளின் கோரிக்கையாக இருந்துள்ளது. அவ்வாறான பின்னணியில் இந்தியா பிரித்து செயற்படுகின்றது என்று கூறுவது பொருத்தமற்ற ஒன்றாகும். அபத்தமானது எனவும் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

# மரியன்னையும் திருக்காட்சிகளும்

## புனித லூர்து மாதா திருவிழா



கத்தோலிக்கத் திருச்சபை ஜனவரி 11ஆம் திகதி புனித லூர்து மாதா திருவிழாவை கொண்டாடுகிறது.

அன்னை மரியாளுக்கு பல பெயர்களில் உலகின் பல்வேறு பகுதிகளிலும் ஆலயங்கள் காணப்படும் நிலையில் அந்த ஆலயங்களின் திருவிழாக்கள் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலான கத்தோலிக்க ஆலயங்களில் லூர்து கெபி அமைக்கப்பட்டுள்ள நிலையில் அந்த லூர்து கெபி லூர்து அன்னையாக மாதா காட்சி கொடுத்த சம்பவங்களையே நினைவு படுத்துகின்றது.

உலகின் பல்வேறு இடங்களில் மரியன்னை அளித்த சிறப்பு வாய்ந்த திருக்காட்சிகளில் ஒன்றாக லூர்து நகர் திருக்காட்சியும் விளங்குகிறது.

புனித லூர்து அன்னை என்ற பெயர்ஃ பிரான்ஸ் நாட்டின் லூர்து நகரில் 1858ம் ஆண்டு பெப்ரவரி 11ம் திகதி முதல், 1858ம் ஆண்டு, ஜூலை மாதம், 16ம் திகதி வரை "பெர்னதெத் சூபிரஸ்" என்ற சிறுமிக்கு அன்னை மரியாள் அளித்த திருக்காட்சியின் அடிப்படையில் அவருக்கு வழங்கப்படுகின்ற பெயராகும்.

பிரான்ஸ் நாட்டின் லூர்து நகரில் பிறந்தவர் பெர்னதெத் சூபிரஸ் அவருக்கு 14 வயதானபோது 1858ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ம் திகதி அவர் தனது சகோதரி மற்றும் தோழியுடன் விறகு பொறுக்கச் சென்றார். அவர்கள் மசபியேல் குகை அருகே சென்று கொண்டிருந்த வேளையில் பெர்னதெத் ஒரு காட்சியைக் கண்டார்.

அன்னை மரியாள் ஓர் இளம் பெண்ணாக அந்த குகையில் தோன்றியுள்ளார். அவர் வெண்ணிற ஆடையும் முக்காடும் அணிந்திருந்தார். நீல நிறத்தில் இடைக் கச்சையை உடுத்தியிருந்தார். கையில் முத்துகளால் ஆன ஒரு செபமாலையை வைத்திருந்தார். அவரது காலடியில் காட்டு ரோஜா செடிகள் காணப்பட்டன.

அவர் கைகளைக் கூப்பி வானத்தை நோக்கியவாறு இருந்தார். பெர்னதெத் தன்னுடன் வந்த இருவரிடமும் "அதோ பாருங்கள் மிகவும் அழகான ஓர் இளம் பெண்" என்று கூறினார். அவரது சகோதரிக்கும் தோழிக்கும் எதுவும் தெரியவில்லை.

பெர்னதெத் அன்னையின் முதல் திருக்காட்சியைக் கண்டபோது மரியாள் அவரை மேலும் சில நாட்கள் அதே இடத்திற்கு வரச் சொன்னார். மரியாளின் வார்த்தைகளை ஏற்று பெர்னதெத்தும் அங்கு சென்றார். பெப்ரவரி மாதம் 18ம் திகதி

**கத்தோலிக்கத் திருச்சபை ஜனவரி 11ல் சிறப்பிக்கின்றது**



மரியாளைக் கண்டு பெர்னதெத் பரவச நிலையில் இருந்ததை அவரோடு சென்றவர்கள் கண்டனர்.

ஒரு திருக்காட்சியில் மரியன்னை தனக்கு அங்கு ஓர் ஆலயம் கட்டப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். பெர்னதெத் அதை பங்குக் குருவிடம் சொன்ன போது அவர் அதற்கான காரணத்தை அறிந்து வருமாறு கூறினார்.

பெப்ரவரி 25ம் திகதி திருக்காட்சியின் போது மரியாளின் கட்டளையை ஏற்று பெர்னதெத் மண்ணைத் தோண்டியபோது அந்த இடத்தில் நீரூற்று ஒன்று தோன்றியது. அது பின்பு ஓடையாக மாறி திருப்பயணிகளை கவர்ந்திழுக்கும் அற்புத இடமாக இன்றும் திகழ்கிறது.

மார்ச் மாதம் 25ம் திகதி அன்னை மரியாள் பெர்னதெத்திடம், "நாமே அமல உற்பவம்" என்று தம்மைப் பற்றிக் கூறினார். இதற்கு "பாவம் எதுவுமின்றி பிறந்தவர்" என்பது அர்த்தம்.

மொத்தம் பதினெட்டு முறை பெர்னதெத்துக்கு தரிசனமளித்த மரியன்னை அவற்றில் 15 திருக்காட்சிகளில் செபமாலையின் மகிழ்ச்சி, துயரம், மகிமை மறைபொருட்களின் 15 மறையுண்மைகளையும் நாளுக்கு ஒன்று என்ற வகையில் பெர்னதெத்தை ஒவ்வொன்றாக தியானித்து செபிக்கச் செய்தார். பெர்னதெத்தின் பின்னே பக்தியுடன் ஒரு கூட்டமும்

எல்.செல்வா

கிண்டல் செய்யும் நோக்கத்தில் மற்றொரு கூட்டமும் பின் தொடர்ந்தன.

ஏப்ரல் மாதம் 7ம் திகதி, பெர்னதெத் அன்னையின் 16வது திருக்காட்சியைக் கண்டபோது மருத்துவ ஆய்வுக்காக 15 நிமிடங்கள் இவர் கையை சிலர் தீயினால் சுட்டனர். பெர்னதெத் அதை உணரவும் இல்லை. அவரது கையில் தீக்காயமும் ஏற்படவில்லை. ஜூலை மாதம், 16ம் திகதி அன்னை மரியாளின் கடைசி திருக்காட்சியைக் கண்ட பெர்னதெத் "இதற்கு முன்பாக நான் அவரை இத்தகைய பேரழகோடு கண்டதே இல்லை" என்று கூறினார்.

கிறிஸ்தவ வரலாற்றில் அன்னை மரியாளின் திருக்காட்சிகள் முதல் நூற்றாண்டு முதலே பதிவு செய்யப்பட்டுள்ளன. உலகின் பல இடங்களிலும் அன்னையின் திருக்காட்சிகள் நிகழ்ந்துள்ளன. ஒவ்வொரு திருக்காட்சியும் கடவுளின்




ஏதேனும் ஒரு செய்தியை வழங்குவதாக விளங்குகிறது. லூர்து நகரின் திருக்காட்சியும் அப்படிப்பட்ட ஒரு திருக்காட்சியாகவே இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் அமைந்துள்ளது. அன்னை மரியாள் திருக்காட்சியளித்த மசபியேல் குகையின் அருகே மரியாளின் பெயரில் பெரிய ஆலயம் ஒன்று கட்டி யெழுப்பப்பட்டது. காட்சியின்போது தோன்றிய நீரூற்றும் பெரும் ஓடையாக மாறி ஆற்றில் கலப்பதுடன் நம்பிக்கையோடு அதன் நீரைப் பருகுவோருக்கு குணமளிக்கும் மருந்தாகவும் செயல்படுகிறது. ஆண்டுதோறும் உலகெங்கும் இருந்து இலட்சக்கணக்கான திருப்பயணிகள் லூர்து அன்னை பேராலயத்தை நாடிச் செல்கின்றனர்.

## தெஹிவளை புனித மரியாள் ஆலய திருவிழா









தெஹிவளை புனித மரியாள் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை 5ஆம் திகதி விமரிசையாக கொண்டாடப்பட்டது. அருட்தந்தை பிரசன்ன கிறிஸ்டோபர் பெரேரா அடிகளாரின் தலைமையில் திருவிழா திருப்பலி கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டதுடன் திருவிழாவின் இறுதி நிகழ்வாக அன்னை மரியாளின் திருச்சுரூப பவனியும் இறுதி ஆசீர்வாதமும் இடம்பெற்றது.

பட உதவி: மத்தியூ ஜேசுதாஸன்



# செபம் மற்றும் அன்பு எனும் ஆயுதங்களை ஏந்திப் பயணிப்போம்

## திருத்தந்தை பிரான்சிஸ்

எப்போதும் சிறந்த படிப்பினையாளர்களாகவும் சான்று பகர்பவர்களாகவும் செபம் மற்றும் அன்பு எனும் ஆயுதங்களை ஏந்தியவர்களாகவும். பயணிக்க வேண்டும் என திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

மனத்தாழ்மையுடன் நாம் கடவுளால் உருவாக்கப்படுவதற்கு நம்மையே அனுமதிப்பதன் வழியாக நமது பணியில் புதுப்பித்தலை அனுபவிக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

தென்சூடானுக்கு திருத்தூதுப் பயணம் சென்றுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் கடந்த 4ஆம் திகதி சனிக்கிழமை தென்சூடானின் தலைநகர் ஜுபாவிலுள்ள புனித தெரேசா பேராலயத்தில் ஆயர்கள், அருள்பணியாளர்கள், திருத்தொண்டர்கள் மத்தியில் உரையாற்றினார். அதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"நாம் செய்த அறச்செயல்களை முன்னிட்டு அல்ல, மாறாக தம் இரக்கத்தை முன்னிட்டு புதுப் பிறப்பு அளிக்கும் நீரினாலும் புதுப்பிக்கும் தூய ஆவியாலும் கடவுள் நம்மை மீட்டார் (தீத் 3:5) என்ற இறைவார்த்தைகளின் அடிப்படையில் பார்ப்போம்.

நைல் நதி திருமுழுக்கின் அடையாளமாக அமைகிறது. நைல் நதி மோசேயின் கதையை நமக்கு நினைவுபடுத்துகிறது. மேலும் விடுதலை மற்றும் மீட்பைப் பற்றியும் அது பேசுகின்றது.

மோசேயின் வாழ்வை நினைவில் கொண்டவர்களாய் மக்களுக்கு நாம் எவ்வாறு பணியாற்ற முடியும் என்பது குறித்துச் சிந்திப்பது அவசியம்

மோசேயின் இரண்டு பண்புகள் குறித்த கண்ணோட்டங்கள்:

முதலாவதாக மோசேயின் மனத்தாழ்மையும் கடவுளின் முயற்சிக்கு அவர் அளிக்கும் பணிவான பதிலுமே நம்மை வெகுவாக ஈர்க்கின்றன.

முதலில் அவர் தன்னை மையமாக வைத்து, தனது பலத்தை மட்டுமே நம்பி செயல்பட்டார். அதன் காரணமாக அவர் தோல்வியைத் தழுவினார். பின்னர் எரியும் முட்புதரின் வழியே கடவுளுடன் உரையாடியபோது அவரது வாழ்வு முற்றிலும் மாறியது.

அதாவது கடவுளின் தனிப்பெரும் வியக்கத்தக்க உதவியுடன் அவர் பார்வோனின் அடிமைத்தளையிலிருந்து இஸ்ரயேலரை மீட்டுக்கொண்டு வந்தார்.

நாமும் மோசேயைப் போன்று நம்மை மட்டுமே மையப்படுத்தி செயல்படுகிறோம். நமது சொந்த திறமைகளையும் திறன்களையும் மட்டுமே பயன்படுத்தி பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்று நினைக்கின்றோம்.

அல்லது பணம், புத்திசாலித்தனம் அல்லது அதிகாரம் போன்ற மனித வளங்கள் வழியாக மக்களின் துன்பங்களுக்கும் தேவைகளுக்கும் விடை காண முடியும் என்று நாம் கருதுகின்றோம்.


ஆனால், நாம் நிறைவேற்றும் அனைத்து செயல்களும் கடவுளிடமிருந்தே வருகின்றன. அவர் நம் இறைவன். நாம் அவருடைய கரங்களில் பணிவான கருவிகளாக இருக்க அழைக்கப்படுகிறோம் என்பதை உணர்ந்துகொள்வோம்.

"ஏன் முட்புதர் தீய்ந்துபோகவில்லை? இந்த மாபெரும் காட்சியைப் பார்ப்பதற்காக நான் அப்பக்கமாகச் செல்வேன்" என்று கூறி அவரை மனத்தாழ்மையுடன் அணுகிச் செல்கின்றார் மோசே.

முட்புதரிலிருந்து கடவுள் மோசேயை அழைத்தபோது, 'இதோ நான்' என்று பதில்மொழி தருகின்றார். மேலும் "இங்கே அணுகி வராதே; உன் பாதங்களிலிருந்து மிதியடிகளை அகற்றிவிடு; ஏனெனில், நீ நின்று கொண்டிருக்கிற இந்த இடம் புனிதமான நிலம்" என்று கடவுள் கூறியபோது, தனது மிதியடிகளை அகற்றிவிட்டு பணிவுடன் அவரது வார்த்தைக்குச் செவிமடுக்கின்றார் (விப 3:35)

இங்குதான் மோசேயின் மனத்தாழ்மை வெளிப்படுவதைக் காண முடிகிறது.

இதுவே நமது பணிவாழ்வில் நமக்கு இருக்கவேண்டிய மனத்



தாழ்மை. மோசேயைப் போன்று வியப்புடனும் பணிவுடனும் கடவுளை அணுகுவதற்கும் அவரிடம் ஈர்க்கப்படுவதற்கும் அவரால் வழிநடத்தப்படுவதற்கும் அவரே நமது வாழ்வின் மையம் என்பதை உணர்ந்து கொள்வதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும்.

மனத்தாழ்மையுடன் நாம் கடவுளால் உருவாக்கப்படுவதற்கு நம்மையே அனுமதிப்பதன் வழியாக நமது பணியில் புதுப்பித்தலை அனுபவிக்கின்றோம் என்பதை அறிந்து கொள்வோம்.

இரண்டாவதாக, மோசேயின் வாழ்வில் அவர் பல நேரங்களில் தன் நிலையிலிருந்து கீழிறங்கி வந்து மக்களுக்கிடையே நின்று அவர்களுக்காக கடவுளிடம் பரிந்து பேசினார்.

பரிந்து பேசுவதென்றால் கீழே இறங்கி வந்து நம் மக்கள் மத்தியில் நம்மை நிறுத்தி அவர்களைக் கடவுளோடு இணைக்கும் பாலமாகச் செயல்படுவது என்பது அர்த்தமாகும்.

மோசேயின் பரிந்துரைத்தலை, கையில் கோலுடன் மோசே, கைகளை நீட்டிய நிலையில் மோசே, விண்ணை நோக்கி உயர்த்திய கரங்களுடன் மோசே என்ற மூன்று உருவங்களை மனதில் கொண்டு நாம் சிந்திப்போமானால் முதலாவதாக, கையில் கோலுடன் மோசே என்ற உருவமானது, அவர் இறைவாக்கினருக்குரிய முறையில் பரிந்து பேசுகின்றார் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

தன் கையில் கொண்டுள்ள கோலின் வழியாக அவர் அதிசயங்களைச் செய்கிறார், கடவுளின் உடனிருப்பு மற்றும் வல்லமையின் அடையாளங்களால் அவர் கடவுளின் பெயரில் பேசுகிறார்.

மக்கள் அனுபவிக்கும் அடக்குமுறைகளைக் கண்டித்து அவர்களை அங்கிருந்து வெளியேற அனுமதிக்குமாறு பார்வோனிடம் முறையிடுகிறார்.

அவ்வாறே, மோதல்களுக்கு மத்தியில் வன்முறையை அடக்கி ஒடுக்கவும் வன்முறையைப் பயன்படுத்தும் அநீதி மற்றும் அதிகார முறைகேடுகளுக்கு எதிராகக் குரல் எழுப்பவும் நமது மக்களுக்காகப் பரிந்து பேசவும் நாமும் அழைக்கப்பட்டுள்ளோம்.

நாம் உண்மையிலேயே பரிந்து பேசும் பணியாளர்களாக இருக்க விரும்பினால்அநீதி மற்றும் வன்முறைச் செயல்களால் ஏற்படும் வலிகளுக்கு முன் நடுநிலை வகிக்க முடியாது.

'மோசே தம் கையைக் கடல்மேல் நீட்டவே' (விப 14:21) என்று விவிலியம் கூறுகிறது. அவரது நீட்டிய கைகள் கடவுள் தனது வலிமையைக் காட்டப் போகிறார் என்பதற்கு அடையாளமாக அமைகிறது.

மேலும், 'மோசே சீனாய் மலையிலிருந்து இறங்கிச் செல்கையில் உடன்படிக்கைப் பலகைகள் இரண்டையும் தம் கைகளில் தாங்கிக் கொண்டிருந்தார்' (விப 34:29) என்கிறது விவிலியம்.

மோசேயின் உயர்த்தப்பட்ட கைகள் கடவுளின் நெருக்கத்தையும் அவர் தனது மக்களுடன் எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கிறார் என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

அருட்பணி செல்வராஜ்
சூசை மாணிக்கம்

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

## குறள் தரும் சிந்தனை



மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன்று உடைமை பெறின்

நல்லது கெட்டது தெரியாதவன் பேதை; அந்தப் பேதையின் கையில் ஒரு பொருளும் கிடைத்துவிட்டால் பித்துப் பிடித்தவர்கள் கள்ளையும் குடித்துவிட்ட கதையாக ஆகிவிடும்.

# கிராமிய போக்குவரத்து சேவையை மேம்படுத்த மற்றொரு நடவடிக்கை

இலங்கை சுதந்திரமடைந்து 75 வருடங்களாகியுள்ளன. இதன் நிமித்தம் சுதந்திரதினப் பவளவிழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு, காலி முகத்திடலில் கடந்த சனிக்கிழமையன்று கொண்டாடப்பட்டது.

இந்நிலையில் இந்நாட்டின் 75 ஆவது சுதந்திர தினப் பவளவிழாவை முன்னிட்டு இந்தியா 500 பஸ் வண்டிகளை இலங்கைக்கு வழங்கியுள்ளது. 'அயல் நாடு முதலில்' எனற கொள்கைத் திட்டத்திற்கு அமைய இந்தியா இலங்கைக்கு வழங்கியுள்ள மற்றொரு ஒத்துழைப்புத் திட்டம் இதுவாகும்.

கடந்த வருடம் இந்நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்த சமயமும் அந்நிய செலாவணி உள்ளிட்ட பல்வேறு உதவி, ஒத்துழைப்புகளை முதலில் வழங்கி உதவிய நாடாகவும் இந்தியா விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான சூழலில் 500 பஸ்வண்டிகளை இந்நாட்டுக்கு வழங்கும் திட்டத்தின் கீழ் 50 பஸ் வண்டிகளுக்கான ஆவணங்கள் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன. அந்த பஸ்வண்டிகளைக் கையேற்ற ஜனாதிபதி, அவற்றைப் பார்வையிட்டதோடு 'கிராமப் புற மக்களுக்கான பஸ் சேவையை மேம்படுத்த இப்பஸ் வண்டிகளைப் பயன்படுத்துமாறும் இதன் நிமித்தம் நாட்டிலுள்ள அனைத்து பஸ் டிப்போக்களுக்கும் இப்பஸ் வண்டிகளை பகிர்ந்தளிக்குமாறும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்நடவடிக்கையின் ஊடாக மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி செயற்பட்டு வருவதை அரசாங்கம் மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மேற்கொண்டுள்ள இந்நடவடிக்கையைக் கிராமப்புற மக்கள் உட்பட முழுநாட்டு மக்களும் வரவேற்றுள்ளனர். இந்நாட்டில் நகரங்களை விடவும் கிராமங்களில்தான் மக்கள் அதிகம் வாழ்கின்றனர். அதனால் அவர்களுக்கான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம். அவற்றில் பயணிகள் பொதுப்போக்குவரத்து சேவையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

தற்போது கிராமப்புறங்களில் வாழும் மக்கள் பயணிகள் பஸ் பொதுப்போக்குவரத்து வசதிகள் தொடர்பில் பலவிதமான அசௌகரியங்களுகக்கு முகம்கொடுத்த வண்ணமுள்ளனர். குறிப்பாக பெரும்பாலான பிரதேசங்களில் குறிக்கப்பட்ட நேரங்களில் மாத்திரமே பஸ்வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. மேலும் சில பிரதேசங்களுக்கு நீண்ட காலமாகப் பயணிகள் பொது பஸ் போக்குவரத்து சேவை நடாத்தப்படாதுள்ளது. இதற்கு பஸ் வண்டிகளின் பற்றாக்குறை அடிப்படை காரணமாக உள்ளது.

இவ்வறான சூழலில் இந்தியா வழங்கும் 500 பஸ் வண்டிகளும் இந்நாட்டின் கிராமப்புற மக்களுக்கான போக்குவரத்து சேவையை மேம்படுத்துவதற்கு பக்கத்துணையாக அமையும். அத்தோடு கிராமப்புற மக்களுக்கான பஸ் போக்குவரத்து சேவை நிச்சயம் வலுவடையும். அதனால் ஜனாதிபதிக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் கிராமப்புற மக்கள் நன்றி தெரிவிக்கக் கூடியவர்களாக உள்ளனர்.

இந்த 500 பஸ் வண்டிகளில் 50 வண்டிகளை ஜனாதிபதி நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாகக் கையேற்றுள்ள அதேநேரம், மேலும் 40 பஸ் வண்டிகளைக் கையளிப்பதற்கான பதிவுகளும் இடம்பெற்று வருகின்றன. ஏற்கனவே 75 பஸ் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி இத்திட்டத்தின் கீழ் இற்றைவரையும் 165 பஸ் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பஸ்வண்டிகளை எதிர்வரும் மார்ச் மாத இறுதிக்குள் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த பஸ் வண்டிகள் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதும் கிராமப்புற மக்கள் பொது பஸ் போக்குவரத்து சேவையின் நிமித்தம் எதிர்நோக்கி வரும் பல்வேறு விதமான அசௌகரியங்களும் நெருக்கடிகளும் நீங்கிவிடும். பொது பஸ்போக்குவரத்து சேவை உள்ளிட்ட அனைத்து பொதுவசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதே பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தின் பணியாகும். அந்தடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆகவே இந்த ஐநூறு பஸ் வண்டிகளும் சேவையில் ஈடுபடத் தொடங்கியதும் கிராமப்புறங்களின் பொது பஸ்போக்குவரத்து சேவையில் மாபெரும் மறுமலர்ச்சி ஏற்படும் என உறுதிபடக்கூற முடியும். அது கிராம மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கும் பக்கத்துணையாக அமையும். அவர்கள் போக்குவரத்து சேவை தொடர்பில் முகம்கொடுத்துவரும் பெரும்பாலான அசௌகரியங்களும் நீங்கிவிடும்.

editor.tkn@lakehouse.lk

# என்னை ஆசீர்வதிக்குமாறு சொல்லாதீர்கள்; நான் ஸாஹிராவால் ஆசீர்வதிக்கப்பட்டவன்

ஸாஹிராவோடு எனக்கு இரண்டு நிலையான உறவுகள் உள்ளன. ஒன்று நான் மாணவனாக இருந்தது. (1949_1952). மற்றையது நான் ஆசிரியனாக இருந்தது. (1956 மே_ 1961 ஜனவரி)

இந்த இரண்டு காலங்களிலும் ஏ.எம்.ஏ. அஸீஸ் என்ற ஒரு பெருமரத்தின் நிழலின் கீழ் ஸாஹிரா இருந்தது. அந்த மரத்தின் நிழலின் நம்மில் பலர் இருந்தோம். வேறு பலர் அதன் கிளைகளில் தங்கும் பறவைகளாய் இருந்தனர். பெரிய மரம் விழுந்ததன் பின்னர்தான் அதன்பெருமை மேலும் தெரிகிறது. அதன் கிளைகளைப் பயன்படுத்திய பறவைகள் விழுவதற்கு முன்னும் பின்னும் பறந்தோடி புதிய கிளைகளில் இருந்து கொண்டு புதிய கீதங்களை இசைத்தன.

மரம் விழுந்ததன் பின்னர், அதன் அடிப்பாகத்தை அகற்றுவதற்கே சிலருக்கு போதும் போதும் என்றாகி விட்டது. மரம் நின்ற இடத்தில் இப்பொழுது நிழல் இல்லை. அது மாத்திரமல்ல, குண்டும் குழிகளுமாக உள்ளது.

எங்கள் தலைமுறை என்று கூறினேன். 1949 நடுக்கூற்றில் இருந்து 52 53 நடுக்கூறுவரை என்னோடு படித்தவர்கள் இதற்குள் வருவார்கள். எமது ஆசிரியர்கள் எவரையுமே இன்றும் கூட என்னால் மறக்க முடியவில்லை. ஃ பாக்கீர், புஞ்சி நிலமே தாகீர், அமுனுகம றாலி. இவர்கள் தமிழோடு சம்பந்தப்பட்டவர்களாக இருந்தவர்கள். கமால்தீன், சண்முகரத்தினம் ஆகியோரை விட எமது வகுப்புகளில் கற்பிக்காத ஆனால் முக்கியமானவராக கந்தையா இருந்தார்.இன்னொருவர் ஏதோ ஒரு கற்பித்தல் பயிற்சிக்காக நமது வகுப்பிற்கு வந்த சதாசிவம் (இவர் பின்னர் பரீட்சைத் திணைக்கள உதவி ஆணையாளராக இருந்தவர்)

இவர்கள் எல்லோரையும் மனம் நிறைய வாய்நிறைய 'SIR' என்று கூறுவோம். உண்மையில் எங்கள் அறிவுக்கண்களைத் திறந்தவர்கள் அஸீஸ் அவர்களே. எங்களுக்கு Government படிப்பித்தார். பின்னர் அவர் கற்பிப்பதை நிறுத்தி விட்டார். தமிழ் சம்பந்தமான ஆசிரியர்களையே இங்கு நினைவு கூருவது பொருத்தம். கமால்தீன் SIR, சண்முகரத்தினம் SIR வகுப்புகளில் கற்பித்தால் நண்பர்களோடு உரையாடுவது போன்றே இருக்கும்.

எனது ஸாஹிரா மாணவ காலத்தில் நான் வேட்டியும் நெஷனலும்தான் அணிந்திருப்பேன். இதனால் என்னையே பலர் 'மாஸ்டர்' என்று கூறுவதுண்டு. சமீம் வகுப்பிற் சேர்ந்த போது என்னைப் பவ்வியமாக SIR என்றே அழைத்தான். தமிழ் பயின்ற மாணவர் தினக்கூட்டம் மிக முக்கியமானது. சிவகுருநாதன் (பின்னர் தினகரன் ஆசிரியர்), சிவராஜா (பின்னர் பிரதி சொலிசிட்டர் ஜெனரல்), முகப்பெருமாள்(கறுவாத்தோட்டத்து பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த சட்டத்தரணி), சிப்லி காசிம் (பின்னர் ஐ. நாவில் சேவை செய்தவர். ஆட்டுப்பட்டித்தெருவில் உள்ள ஒரு முக்கியஸ்தரின் மகன்)

உண்மையில் தமிழ் சார்ந்த ஸாஹிரா தொடர்புகளைப் பார்க்கின்ற பொழுது எமது வகுப்பு மாணவர்கள் என்ற வட்டம் போதாது. அதற்கு வெளியேதான் வரலாற்றுப் புகழ்மிக்க தமிழ் ஆர்வலர்கள் பலர் இருந்தனர். அவர்களுள் மிக முக்கியமானவர்கள் எச்.எம்.பி முகைதீன் (பிரபல கம்யூனிஸ்ட்வாதி, எழுத்தாளர், அரசியல்வாதி), வீ.ஏ. கபூர் (விஞ்ஞான மாணவன். ஆனால் பிற்காலத்தின் புகழ்பெற்ற தமிழ் வானொலி அறிவிப்பாளர்)



இவர்களை விட முக்கியமான இன்னொருவர் மு.மீ. சாகுல் ஹமீத். பிரபல சிறுகதை ஆசிரியர். இவரது சிறுகதைத் தொகுதி 1950 இல் வெளிவந்தது. அவருடைய நண்பர் குருசாமி. நமது களமாக இருந்தது தமிழ் மன்றந்தான். தமிழ் மன்றத்தினால் றோனியோ அச்சிடப்பெற்ற 'உதயம்' என்ற சஞ்சிகை வெளியிடப் பெற்றது. முதலாவது ஆசிரியர் மு.மீ.சா. இரண்டாவதற்கு நான்.

ஸஹிரா கல்லூரி மாணவர்கள் மற்றைய கல்லூரிகளுடன் விவாதத்திற்குச் செல்வதுண்டு. முக்கியமாக பேச்சுப் போட்டிக்கும் செல்வதுண்டு வி வே கானந்த சபை நடத்திய நாவலர் பேச்சுப் போட்டிக்கு ஒரு முறை நானும் சிப்லியும் சென்றோம். சிப்லி க்குப் பரிசு கிடைத்தது. எனக்கு இல்லை.

கமால்தீன் SIR உதவியுடன் வானொலி பரிச்சயம் ஒன்று ஏற்பட்டது. ஆனால் அப்பொழுது நான் வானொலிக்கு ஏற்கனவே போய்க் கொண்டிருந்தேன். சிவகுருநாதன், சிவராஜா நட்பினால் வெள்ளவத்தைத் தமிழ்க்கூட்டங்களுக்கு செல்வது வழக்கம். அங்கு வரும் பிரசங்கிகளிடம் தமிழ் சம்பந்தமான வினாக்கள் கேட்பதுண்டு. நான் ஸாஹிராவில் படித்த காலத்தில், எனக்கு பாரிய சுகவீனம் ஏற்பட்டது.

ஏறத்தாழ ஒரு வருடம் பாடசாலைக்குப் போகாமல் இருந்தேன். சுகவீனத்துக்கு முன்னோ பின்போ நான் தமிழ்ச் சங்கத் தலைவராக இருந்தேன். சிவகுருநாதன் செயலாளர், யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு விழாவிற்கு வந்திருந்த மா.பொ. சிவஞான கிராமணியாரை அஸீஸ் அவர்களே தமிழ்ச்சங்கத்தில் பேசுமாறு அழைத்திருந்தார். அந்த யாழ்ப்பாண மகாநாடு பற்றி ஒரு தகராறு இருந்தது. நான் தலைமையுரையில் அது பற்றி விளாசி விட்டேன். அஸீஸ் அவர்களுக்கு அது சற்று அசௌகரியமாகப் போய்விட்டது.

கூட்டம் முடிந்த பின்னர், என்னை தமது அலுவலகத்திற்கு வரச்சொல்லி எச்சரிப்பு கலந்த தொனியில் புத்திமதி கூறினார். அன்று பேச்சு வாங்கியது என்னமோ உண்மைதான். ஆனால் அன்றிலிருந்து நான் ஒரு தமிழ் ஆர்வமுடையவன் என்ற கணிப்பை அவரிடம் இருந்து பெற்றேன். கமால்தீன், சண்முகரத்தினம் ஆகிய நல்லாசிரியர்களிடம் இருந்து நாம் பெற்றுக்கொண்ட பேறு, தமிழைப்பற்றி துணிவுடன் பேறுவதற்கான மனவலிமையைப் பெற்றதுதான். தமிழுக்குள் நின்றுகொண்டால் தான் தமிழைப்பற்றி பேசலாம் என்ற பயிற்சியைத் தந்தவர்கள் அவர்கள். இந்த பின்புலத்தோடு பல்கலைக்கழகம் சென்ற போது, அங்கு பேராசிரியர்கள் கவனத்தை ஈர்ப்பது சிரமமாக இருக்கவில்லை. விக்னேஸ்வராவில் தொடங்கிய பயணம் ஸாஹிரா வழியாக பல்கலைக்கழகத்தினுள் நிறுத்தியது.

1956 இல் நான் ஸாஹிராவில் ஆசிரியனாகச் சேர்ந்த பொழுது முதலில் இலங்கை வரலாறும் அரசியலும்தான் படிப்பித்தேன். பின்னர் உவைஸ் உடன் சேர்ந்து தமிழ் கற்பித்தேன். பின்னர் உவைஸ் பரீட்சைத் திணைக்களத்திற்குச் செல்ல, நான் தமிழ்ச்சங்க பொறுப்பாசிரியர் ஆனேன். ஸாஹிராவில் எனது தமிழ் மாணவர்களாக இருந்தவர்கள் பிற்காலங்களில் அனைத்திலங்கை மட்டங்களில் பெயரீட்டியவர்கள்.

இலங்கை பல்கலைக்கழக புதுமுகப் பரீட்சையில் தமிழில் மிகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவருக்கு வழங்கும் சி.வை.தாமோதரம் பிள்ளை கிங்ஸ்பெரி நினைவுப் பரிசில்களை முதலில் வென்ற இருவரும் ஸாஹிராவின் அமீர் அலியும், எஸ்.எச்.எம். ஜமீனுமே ஆவர். சாதனை அத்துடன் நிற்கவில்லை. பல்கலைக்கழகத்தில் முதலாம் வருடப் பரீட்சையில் அஸீஸ் அவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. எனக்கு மிகமிகப் பெரிய திருப்தி. அதில் ஒரு சுவாரசியம் என்னவென்றால், இந்த பரிசில்களிற்கான தொகை 53, 54, 55 வருட நாடகங்கள் மூலம் கிடைத்தன. அந்த நாடகங்களில் எமது தாய், தகப்பன், ஆசிரியர்கள் வழிவந்த ஆசிகளால் நான் முக்கிய பாத்திரம் நடித்திருந்தேன்.

மற்றைய மாணவர்களை மறந்துவிட முடியாது. எம்.ஏ.எம். சுக்ரி இலங்கையின் அரபுமொழி அறிஞர்களில் ஒருவர். ஹயாத் முஹம்மத், ரத்தினம், ராஜகோபால், அருணாசலம், எச்.எம். செரீப், ராஜகுகனேஸ்வரன் ஆகிய மாணவர்களை நான் மறந்துவிட முடியாது. எனது ஆசிரிய காலத்து செயற்பாடுகளில் ஒன்றாக அமைந்தது, நியூல் என்ற நாடகத் தயாரிப்பாகும். இப்சன் எழுதிய ghosts எனும் நாடகத்தை தழுவி, பேராசிரியர் அ. சீனிவாசராகவன் செய்த ஆக்கம் இது. அற்புதமான நாடகம், மாணவர்கள் மிகத் திறம்பட நடித்தனர். அந்தக் காலத்தில் மிக முக்கியமாகப் பேசப்பட்ட நாடகங்களில் ஒன்று. ஹயாத் முஹம்மதுவின் நடிப்பு மிகச் சிறப்பாகப் பேசப்பட்டது. இவற்றுக்கெல்லாம் அஸீஸ் தந்த ஆதரவு தான் வேராக நின்றது.

பின்னர் 59, 60 இல் நாட்டின் அரசியலும் ஸாஹிராவின் அரசியலும் மாறின. ஆனால் அந்த நினைவுகள் இன்னும் நிழலாடுகின்றன. தயவுசெய்து என்னை ஆசீர்வதிக்கச் சொல்லாதீர்கள். நான் அந்த நிறுவனத்தால் ஆசீர்வதிக்கப்பட்டவன். எனக்கு அது போதும்.

மிக்க அன்புடன்
கா. சிவத்தம்பி

**பேராசிரியர் கா. சிவத்தம்பி எழுதிய பதிவு**
**நன்றி 'தமிழ் அமுதம்'**
**தமிழ் விழா 2004 வெளியீடு,**
**ஸாஹிரா கல்லூரி, கொழும்பு 10.**
**தொகுப்பு ஏ.எம். முஹம்மத் ஸப்வான், சீனன்கோட்டை, பேருவளை**
**(பழைய மாணவன் – ஸாஹிராக் கல்லூரி, கொழும்பு)**

# பல்லாயிரம் ரசிகர்களை காந்தக்குரலால் கவர்ந்தவர் பாடகி வாணி ஜெயராம்

இந்தியாவின் பிரபல பாடகி வாணி ஜெயராம் கடந்த 4 ஆம் திகதி காலமானார். சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தனது வீட்டுப் படுக்கையிலிருந்து கீழே விழுந்து தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் உயிரிழந்தார்.

வாணிஜெயராம் சென்ற வாரம் இந்திய மத்திய அரசின் 'பத்மவிபூஷண்' விருதுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார்.இவரது இப்பேரிழப்பு இசையுலகில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவின் அனைத்து மொழிகளிலும் இவர் பல்லாயிரக்கணக்கான பாடல்களைப் பாடியுள்ளார். தனது காந்தக் குரலால் பல கோடி ரசிகர்களை ஈர்த்தவர்.

'அபூர்வ ராகங்கள்' திரைப்படத்தில் இவர் பாடிய "ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை பாடல்", கேள்வியின் நாயகனே மற்றும் பாலைவனச்சோலை படத்தில் இடம்பெற்ற "மேகமே மேகமே பால் நிலா தேயுதே", 'தீர்க்க சுமங்கலியில்' இவர் பாடிய "மல்லிகை என் மன்னன் மயங்கும்"மற்றும் சங்கராபரணம் படத்தில் இடம்பெற்ற அனைத்து பாடல்களும் காலத்தால் அழியாத கானங்களாகும்.

அதிக இந்திய மொழிகளில் இசையால் தன் ஆளுமையை செலுத்தியவர் ஏழுஸ்வர கானக்குயில் வாணிஜெயராம் அவர்கள்.

வாணி ஜெயராம் நவம்பர் 30, 1945 இல் வேலூரில் பிறந்தார். இவரது இயற்பெயர் கலைவாணி என்பதேயாகும். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி, வங்காளம், உருது, ஒடிஸா என அனைத்து இந்திய மொழிகளிலும் பாடியுள்ளார்.

இவரின் இசைப்பயணம் 1971ஆம் ஆண்டு 'குட்டி' என்ற ஹந்தி திரைப்படத்தின் மூலம் அறிமுகமானது. அன்று முதல் நான்கு தலைமுறைகளாக பின்னணி பாடி வருகிறார். வெளிநாடுகள் சென்று பல இசை நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார். இவர் 'ஏழு ஸ்வரங்களின் கான சரஸ்வதி' என்று அழைக்கப்படுகிறார்.



வாணிஜெயராம் தமிழ்நாட்டில் உள்ள வேலூரில் ஒரு இசைக்குடும்பத்தில் பிறந்தவர். இவரின் பெற்றோர் துரைசாமி ஐயங்கார்–பத்மாவதி ஆவர்.

தமிழ்த் திரையுலகில் முதன்முதலாக 1974ஆம் ஆண்டு தீர்க்கசுமங்கலி என்ற திரைப்படத்தில் கவிஞர் வாலி இயற்றிய 'மல்லிகை என் மன்னன் மயங்கும்...' பாடலை எம்.எஸ். விஸ்வநாதன் இசையில் பாடினார்.

அதன் பின்னர் ஏழு ஸ்வரங்களுக்குள், கேள்வியின் நாயகனே, என்னுள்ளே எங்கும் ஏங்கும் கீதம், யாரது சொல்லாமல் நெஞ்சள்ளி போவது, கவிதை கேளுங்கள் கருவில் போன்ற கடினமான பாடல்களை தமிழ்த்திரையுலகில் பதிவுசெய்துள்ளார்.

வாணிஜெயராம் மூன்று முறை சிறந்த பின்னணி பாடகிக்கான இந்திய தேசிய விருதுகளைப் பெற்றுள்ளார். இவர் தமிழ்நாடு, ஆந்திரா, ஒடிசா மற்றும் குஜராத் மாநில விருதுகளையும் சிறந்த பின்னணிப் பாடகிக்கான விருதுகளையும் பெற்றுள்ளார். ஹிந்தியில் வாணி அறிமுகமாகி மராத்தி ரசிகர்களை கவர்ந்த போது லதாமங்கேஷ்கர், ஆஷா போஷ்லே போன்ற பிரபல பாடகிகள் சற்று ஆடிப்போனார்கள்.

பி.சுஷீலா, எஸ்.ஜானகி, வாணி ஜெயராம் ஆகியோரை 'முப்பெரும் இசையரசிகள்' என வரிசைப்படுத்தி போற்றலாம். இலங்கைக்கு பல தடவைகள் வாணி விஜயம் செய்து இசைப் பணியாற்றியுள்ளார். அன்பு,அடக்கம், பணிவு, தலைக்கனமின்மை போன்ற நற்பண்புகளுக்கு சொந்தக்காரர் வாணி ஜெயராம். 1980 களில் இலங்கை பேராதனை அக்பர் மண்டபத்திலும், 1990 களில் கொழும்பு பி.எம்.ஐ.சி.எச் இலும் இசைநிகழ்ச்சியை நடத்தியவர் வாணி.

எஸ். கணேசன் ஆச்சாரி சதீஷ்
கம்பளை

# பீப்பள்ஸ் லீசிங் ஹிங்குராகொட கிளையின் ஆறாம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்

பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி (பிஎல்சி)ஹிங்குராகொட கிளை அண்மையில் தனது ஆறாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியதோடு அதனை முன்னிட்டு ஹிங்குராகொட மற்றும் மெதிரிகிரிய பிரதேசங்களில் உள்ள சிறுவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு பங்களிப்பு வழங்கியிருந்தது.

ஹிங்குராகொட கிளை 2017ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதோடு, தரமான சேவையை சிறிய மற்றும் பெருநிறுவன வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது. பி.எல்.சியின் ஹிங்குராகொட கிளை முகாமையாளர் சானக பிரசாத் தலைமைத்துவத்தின் கீழ் ஊழியர்களின் பங்களிப்புடன் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

"இப்பிரதேசத்தில் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள பிள்ளைகளின் கல்வி வாய்ப்புகளை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் இலக்காகும். சிறுவர்களின் கல்வியைத் தொடர்வதில் நாங்கள் ஒன்றிணைந்து அவர்களுக்கு ஆதரவளிக்க முடிந்ததில் மகிழ்ச்சியடைகிறோம்" என ஹிங்குராகொட கிளை முகாமையாளர் சானக பிரசாத் தெரிவித்தார்.





பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி என்பது இலங்கையின் முன்னணி வங்கி அல்லாத நிதி நிறுவனமாகும். மேலும் நாட்டின் மிகப்பெரிய அரச வங்கிகளில் ஒன்றான மக்கள் வங்கியின் துணை நிறுவனமாகும். 1996ஆம் ஆண்டு விசேட குத்தகை நிறுவனமாக செயற்படத் தொடங்கிய பீப்பள்ஸ் லீசிங், 2011ஆம் ஆண்டு கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டது. பீப்பள்ஸ் லீசிங்கானது பங்களாதேஷில் ஒரு வெளிநாட்டு முயற்சி உட்பட நிபுணத்துவம் வாய்ந்த ஆறு துணை நிறுவனங்களுடன் பன்முகப்படுத்தப்பட்ட வங்கி அல்லாத நிதி அதிகார மையமாக வளர்ந்துள்ளது.

# துருக்கியை உலுக்கிய பூகம்பம்






















## கவிக்கமல், பாசில், ரஜனி இணைந்து வழங்கும் "வீனஸ்", "அக்ஷரா" இசைக்குழுவினரின் இசை நிகழ்வு

IDM NATIONS CAMPUS INTERNATIONAL பிரதான அனுசரணையில் கவிக்கமல், பாசில், ரஜனி இணைந்து வழங்கும் "வீனஸ்" "அக்ஷரா" இசைக்குழுவினர்களின் இனிய இசையில் இலங்கையின் முன்னணி பாடக, பாடகிகள் கலந்து சிறப்பிக்கும் "தேனும் பாலும்" கலந்த "வசந்த கானங்கள்" 60வது இசைநிகழ்ச்சி எதிர்வரும் 12. 02. 2023 ஞாயிறன்று கொழும்பு 07 PUBLIC LIBRARY AUDITORIUM பி.ப. 5.00 மணிக்கு மிகக் கோலாகலமாக இடம் பெற உள்ளது.

தினகரன், தினகரன் வாரமஞ்சரி, தமிழ் எப் எம், மொஹபத் tv மற்றும் அக்ஷரா தமிழ் மீடியா ஊடக அனுசரணையில் இடம்பெறும் இந்நிகழ்வுக்கு கலாநிதி விநாயகமூரத்தி ஜனகன் (தலைவர் IDM Nations Campus international) தலைமைதாங்குவார்.

இதில் முன்னிலை அதிதியாக டாக்டர் எம்.ஏ.சி. மௌசூமும் பிரதம அதிதியாக கலாபூஷணம், கவியமுதன் இலங்கை பொன்மனச் செம்மல் எம்.எஸ் தாஜ்மஹானும், விஷேட அதிதியாக தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தெ. செந்தில் வேலவரும் கௌரவ விருந்தினராக கலாநிதி அதிவணபிதா அருட்கலாநிதி எஸ். சந்ரு பெர்ணான்டோவும் (சர்வதேச இசைக்கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவர்) கலந்து கொள்வார்கள்.

முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம், (சிரேஷ்ட உப தலைவர், மலையக மக்கள் முன்னணி), சிரேஷ்ட ஊடகவியலாளர் கவிஞர்ஈஸ்வரலிங்கம், தமிழ் எப் எம் நிர்வாகி ஹோசியா அனோஜன், சமூக சேவையாளர் ஆனந்தகுமார், கந்தசாமி கருணாகரன் (தேசிய ஒற்றுமை ஒருமைப்பாட்டுக்கான செயலகம்), தொழிலதிபர் டாக்டர் பஹார்தீன், தொழிலதிபர் டாக்டர் ரமிஸ் மொஹம்மட், தேசமான்ய இஸ்மாயில், தேசமான்ய மௌசும் ஜிப்ரி, தொழிலதிபர் மொஹம்மட் சிராஜ், டாக்டர் கௌசலா தேவி கோவிந்தப் பிள்ளை, நகர சபை உறுப்பினர் ஜோசப் பெர்ணான்டோ, சமூக சேவையாளர் உசைன் போல்ட், Touch Touch உரிமையாளர் நவராஜா, தொழிலதிபர் ரபீக், சமூக செயற்பாட்டாளர் ஏ.டீ முரளீஸ்வரன், சமூகசேவையாளர் சாஜஹான் color house மனித நேயன் இர்சாத் ஏ காதர், சமூக சேவையாளர் அஸீஸ் லக்கானா, கலைஞர் ஏ.ரவீந்திரன், கலைஞர் சண்மு, தொழிலதிபர் கலைஞர் ஓவியநாதன், குருசாமி புவனேஸ்வரன், குருசாமி தேசமான்ய பிச்சைக்கிருஷ்ணா, சமூக சேவையாளர் சிராஸ் யூனூஸ், சமூக சேவையாளர் இம்தியாஸ் காரியப்பர், கிரிக்கட் பயிற்றுவிப்பாளர் ஜே.எம். எம்.ரிஸ்வான், குருசாமி ஜே.வீரமூர்த்தி, தெகிவளை நகர சபை உறுப்பினர் முஸ்தபா ஷரீனா, அஸீஸ் பவுண்டேசன் அதிபர் அஷ்ரப் அஸீஸ், தொழிலதிபர் மொஹம்மட் நிதார், கலைஞர் பொன் பத்மநாதன், கலைஞர் ராதா மேத்தா, கவிஞர் தனபாலன், சமூக சேவையாளர் அஹம்மட் ரியாஸ், இசையமைப்பாளர் பஸால் ஜின்னா, கலாபூஷணம் மொஹம்மட் அலி ஜே.பி, சமூகசேவையாளர் மொஹமட் ஹமீத் ஆகியோர் இதில் சிறப்பு அதிதிகளாக கலந்து கொள்வார்கள். கவிஞர்கள், கலைஞர்கள், வர்த்தக பிரமுகர்கள் என ஏராளமானோர் இதில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். தமிழ் எப் எம் நிகழ்ச்சி தொகுப்பு ஆர் அஜித்குமார்.

கட்டணமின்றி இலவசமாக நடைபெறும் இம்மாபெரும் இசை நிகழ்வில் ரசிகர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அழைக்கின்றனர்.






## கலைஞர் கலைக்கமலின் 57 ஆவது கீத்ராத் "FIVE IN ONE" மாபெரும் இசை நிகழ்ச்சி

நாடறிந்த ஜனரஞ்சக பாடகர் கலைஞர் கலைக்கமலின் 57 ஆவது கீத்ராத் " FIVE IN ONE " மாபெரும் இசை நிகழ்ச்சி இம்மாதம் 26 ஆம் திகதி கொழும்பு 7 ஜே.ஆர்.ஜெயவர்த்தன மண்டபத்தில் ஞாயிறு மாலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக "இலக்கியபுரவலர்" ஹாஸிம் உமர் கலந்து சிறப்பிக்கும் இந்நிகழ்வில் முன்னிலை கலைப்புரவலர்" ஸைட் சிவாஜி மௌலானா, தேசமான்ய அக்கரைப்பற்று ஏ. பி. அப்துல் கையூம் தலைமை வகிக்கவுள்ளனர்.




# இராமகிருஷ்ண மிஷனின் சேவை நிலையத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா







இலங்கையில் 96 வருடங்கள் ஜீவ சேவையாற்றிவரும் இராம கிருஷ்ண மிஷனின் மற்றுமொரு சேவை நிலையத்திற்கான அடிக் கல் நாட்டுவிழா (5)தைப்பூச தினத் தன்று நுவரெலியா கொட்டகலையில் நடைபெற்றது.

"சிவானந்த நலன்புரி நிலையம்" என்ற பெயரில் மலையகத்திற்கான முதலாவது சேவைகள் நிலையத்தின் அடிக்கல் நாட்டுவிழா ஞாயிறன்று(5) காலை 9 மணிக்கு இலங்கை ராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி அக்ஷராத்மானந்த ஜீ மகராஜ் தலைமையில் நடைபெற்றது.

அங்கு, கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ராஜேஸ்வரானந்தா ஜியின் பஜனைகள் வேதபாராயணம் சகிதம் அடிக்கல் நாட்டினார். இ.கி. மிஷனின் மட்டக்களப்பு மாநில தலைவர் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் வரவேற்புரை மற்றும் அறிமுகவுரை நிகழ்த்தினார்.

ஹறிங்டன் தோட்டத்தில் அதற்கான நிலத்தை சீமான் விஜயபாலன் செட்டியார் மிஷனுக்கு வழங்கி வைத்து உரையாற்றினார்.

மேலும், கண்டி உதவி இந்திய தூதராலாய இந்திய உதவி தூதுவர் கலாநிதி ஆதிரா கலந்து சிறப்பிக்க,பிரதேச விகாராதிபதி திஸ்ஸமகாராமய தம்மஜோதி கலந்து சிறப்பித்தார்.

இதற்கென்று நாடெங்கிலும் இருந்து இராமகிருஷ்ண மிஷன் பக்தர்கள் அபிமானிகள் கொட்டகலை சென்றிருந்தனர். **(சகாதேவராஜா )**

# கிழக்கின் குரல்



## விவசாயத்தில் ஈடுபடும் மட்டக்களப்பு மாற்றுத்திறனாளிகளுக்கு உலர் உணவு

**கல்குடா தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் வீட்டுத்தோட்டம் செய்யும் விஷேட தேவையுடையோருக்கு உலர் உணவு பொருட்கள் வழங்கும் நிகழ்வு (திங்கட்கிழமை) சமூக பராமரிப்பு காரியாலயத்தில் இடம் பெற்றது.கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் விஷேட தேவையுடையோரை ஊக்குவிக்கும் முகமாகவும் நாட்டின் பொருளாதார நெருக்கடியில் இருந்து மக்களை பாதுகாக்கும் நோக்கிலும் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் வழிகாட்டலில் பல்வேறு வேலைத்திட்டங்கள் இடம் பெற்று வருகின்றது.



இதன் அடிப்படையில் கோறளைப் பற்று பிரதேச செயலகப் பிரிவில் வாழ்வின் உதயம் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் அங்கத்தவர்கள் 128 பேருக்கு வை.எம்.சி.ஏ. நிறுவனத்தின் அனுசரனையில் வீட்டுத் தோட்ட செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். வீட்டுத்தோட்ட நடவடிக்கையில் ஈடுபடும் விஷேட தேவையுடைய 128 பேருக்கும் அரிசி, சீனி, பருப்பு, கடலை, தேயிலை, கோதுமை மா, சோயா மீட், சமபோச போன்ற பொருட்கள் ஒரு பொதி பத்தாயிரம் ரூபா பெறுமதியில் வழங்கி வைக்கப்பட்டது.

## தம்பலகாமத்தில் யானைகளின் தொல்லை மேலும் அதிகரிப்பு

### விவசாயிகள் கவலை தெரிவிப்பு

**கந்தளாய் தினகரன் நிருபர்**

முள்ளிப்பொத்தானை பிரதேச சபைக்குட்பட்ட பாலம் போட்டாறு மற்றும் பத்தினி புரம் பகுதியில் யானைகள் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பயிர் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் யானைகள் புகுந்து பெறுமதியான பயிர்களை அழித்து விட்டு செல்வதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சனிக்கிழமை (4) தென்னம் தோட்டத்தினுள் புகுந்து தென்னை மற்றும் மா மரங்களை அழித்துள்ளதாகவும் அப்பகுதியில் வசிப்போர் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு அரசாங்கத்தினால் பயிர்கள் தந்தாலும் யானை வேலியை தர மறுக்கின்றார்கள் நாங்கள் அன்றாடம் கஷ்டப்பட்டு செய்கின்ற பயிர்களைக் கூட பாது காக்க முடியாத நிலையில் உள்ளதாக தெரிவிக்கின்றார்கள்.

இப்பகுதியில் தினமும் யானைகள் புகுந்து பயிர்களை சேதப்படுத்தி வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் யானை வேலி அமைத்து தருமாறு பல தடவைகள் முறையிட்டும் அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லையெனவும் தெரிவிக்கின்றார்கள்.

எனவே இப்பகுதி மக்களின் நலன் கருதி விரைவில் யானை வேலிகளை அமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## 75 வயது முதியவர்கள் கௌரவிப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடி பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற சுதந்திர தின நிகழ்வின் போது 75வயது முதியவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

75வது சுதந்திர தின நிகழ்வுகள் காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதய சிறீதர் தலைமையில் பிரதேச செயலக முன்றலில் (4) சனிக்கிழமை இடம் பெற்றது.

இதில் உதவி பிரதேச செயலாளர் திருமதி எம்.எஸ்.சில்மியா, நிருவாக உத்தியோகத்தர் திருமதி ஜாயிதா ஜலால்தீன், சமுர்த்தி முகாமையாளர் திருமதி பத்மா ஜெயராஜ் கிராம உத்தியோகத்தர்களுக்கான நிருவாக உத்தியோகத்தர் எம்.எம்.ஜரூப் உட்பட சமுர்த்தி வலய முகாமையாளர்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது தேசியக் கொடியை காத்தான்குடி பிரதேச செயலாளர் உதய சிறீதர் ஏற்றி வைத்தார்.



இந்த நிகழ்வின் போது பிரதேச மட்ட, மாவட்ட மட்ட வீட்டுத் தோட்டப் போட்டியில் முதலாமிடம் பெற்ற மற்றும் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற வீட்டுத் தோட்ட உரிமையாளர்களுக்கு மற்றும் புத்தெழுச்சிப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் இரண்டாமிடம் பெற்ற உத்தியோகத்தர்களும் பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன் 75வயது முதியவர்களுக்கு பெட்சீட் அன்பளிப்பு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

## நிந்தவூர் அல் மஸ்ஹர் கல்லூரியில் மாணவர் பாராளுமன்ற அமர்வு

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

நிந்தவூர் அல்மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவர்களின் "மாணவர் பாராளுமன்ற அமர்வு அண்மையில் மிகவும் சிறப்பாக இடம் பெற்றது. கல்வியமைச்சின் சுற்று நிருபத்திற்கமைய செயலாளர் நாயகமாக கல்லூரி முதல்வர் ஏ.எல்.நிசாமுதீன், குழுக்களின் தலைவர்களாக பிரதி அதிபர் திருமதி.தாஹிறா உவைஸ், ஆசிரியர்களான எம்.பி.ஹஸன் திருமதி.ஹிதாயா சபீக் ஆகியோர்களும் செயற்படுகின்றனர்.

இதேவேளை சபாநாயகர், பிரதி சபாநாயகர், பிரதம மந்திரி, 10 அமைச்சரவை அமைச்சர்களும், 10 பிரதி அமைச்சர்களும் தெரிவு செய்யப்பட்டு, சத்தியப் பிரமாண நிகழ்வுகளும் இடம்பெற்றன.



பாடசாலை மாணவர்கள் மத்தியில் மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணரும் வகையிலும், திறமைசாலிகளை இனங்கண்டு. அவர்களது மெய்ப்பாட்டுடனான பேச்சாற்றல், தமிழ், ஆங்கில, சிங்கள மொழியாற்றல் கேட்போரையும், பார்ப்போரையும் பிரம்மிக்கச் செய்யும் அளவிற்கு உச்ச நிலை தொட்டிருந்தது.

உண்மையில் இலங்கை பாராளுமன்றத்தில் என்ன பேசுவதென்று தெரியாமல் எதையோ உளறி விட்டு, குறட்டை விட்டுத் தூங்கும் கொந்தராத்து அரசியல் வாதிகளுக்கு மத்தியில் பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தில் மாணவிகள் அனல் தெறிக்க தமது கருத்துக்களை மிகத் தெளிவோடும், துணிவோடும் தமிழிலும் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் பேசியிருந்தமை அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருந்தது.

## அஹதிய்யா சம்மேளனத்தின் முப்பது வருட பூர்த்தி



சாய்ந்தமருது தாறுல் குர்ஆனியா அஹதிய்யா சம்மேளனத்தின் 30வருட பூர்த்தியை முன்னிட்டு கலை கலாசார நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் சாய்ந்தமருது தாறுல் குர்ஆனியா அஹதிய்யா சம்மேளனத்தின் தலைவர் ஏ.எம். அன்ஸார் தலைமையில் அல்ஹிலால் பாடசாலை மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (05) இடம் பெற்றது. இந்நிகழ்வுக்கு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், சாய்ந்தமருது கோட்ட கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ. மலிக், அல்ஹிலால் வித்தியாலய அதிபர் யூ.எல்.நசார், மழ்ஹருஸ் சம்ஸ் மகா வித்தியாலய அதிபர் எம்.சி.என்.றிப்கா அன்ஸார், லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலய அதிபர் ஏ.ஐ.சம்சுதீன், சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்மா பெரிய பள்ளிவாசலின் தலைவர் ஏ.ஹிபதுள் கரீம், சாய்ந்தமருது உலமா சபையின் தலைவர் சலீம், அம்பாறை மாவட்ட அஹதிய்யா பாடசாலைகளின் சம்மேளனத்தின் தலைவர் யூ.எல்.றிபா உத்தின் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

அஹதிய்யா பாடசாலைகளின் உயர்மட்ட அதிகாரிகள் சாய்ந்தமருது கலாசார உத்தியோகத்தர், மாணவ, மாணவிகள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## யானை தாக்கியதால் ஒருவர் உயிரிழப்பு

இறக்காமம் வாங்காமம் 10 ஏ கிராமத்தில் 2023.02.04 ஆம் திகதி இரவு 10 மணியளவில் யானை தாக்கியதால் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது மரணமடைந்த நபர் வாங்காமம் 10 ஏ கிராமத்தில் உள்ள தனது நெற்காணியில் மேற்கொள்ளப்பட்ட வேளாண்மையினை காட்டு மிருகங்களிடம் இருந்து பாதுகாக்கும் நோக்கில் இரவுக் காவலுக்காக வயற்காணிக்கு சென்றிருந்தார். குறித்த நெற்காணியை நோக்கி வந்த யானை தனது வயற்காணியை சேதப்படுத்தும்போது யானையை துரத்தியுள்ளார். இதனால் கோபமடைந்த யானை குறித்த நபரை தாக்கியதால் யானை தாக்கிய இடத்திலேயே குறித்த நபர் மரணமடைந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவருகின்றது.

இவ்வாறு மரணமடைந்தவர் இறக்காமம் வாங்காமம் 10 ஏ. கிராமத்தை பிறப்பிடமாகவும் அக்கரைப்பற்று 10. இல.199/2 அரிசி ஆலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட 04 நான்கு பிள்ளைகளின் தந்தையும் ஆதம் லெவ்வை அஸ்மியா என்பவரின் கனவனுமான றாஸிக் முசாதிக். (வயது 42) என்பவராவார்.

## உலக அமைதிக்கான பிரார்த்தனை

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பகுதியில் அமைந்துள்ள உலகம் உய்ய அவதரித்த பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி ஆசிரமத்தில் தைப்பூச தினத்தன்று உலக அமைதிக்கான பிரார்த்தனையும் விசேட பூசையும் இடம் பெற்றது.

இதன்போது வட இந்திய இமய மலையில் ஊற்றெடுக்கும் புனித நர்மதா நதியில் கண்டெடுக்கப்பட்டு ஆசிரமத்தில் வைக்கப்பட்டுள்ள சக்திமிகு பானலிங்கத்திற்கு பக்தர்கள் அவர்களது கரங்களால் பால் அபிசேகம் செய்யும் நிகழ்வும் இடம்பெற்றது.

ஆசிரமத்தின் ஸ்தாபகரும் பகவான் பணியில் தன்னை ஈடுபடுத்தி கொண்டிருப்பவருமான ச.சாம்பசிவம் தலைமையில் இடம் பெற்ற பிரார்த்தனையும் விசேட பூசையும் மற்றும் பால் அபிசேகம் செய்யும் நிகழ்விலும் பக்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.



பூஜையை தொடர்ந்து பக்தர்களுக்கு தைப்பூச நாள் மற்றும் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி அற்புதங்கள் தொடர்பான விசேட சமய சொற்பொழிவும் சமய பெரியார்களால் வழங்கப்பட்டது.

தொடர்ந்து கலந்து கொண்ட அனைவருக்கும் இமய மலையில் உற்பத்தியாகும் இந்து கங்கை யமுனா கோதாவாரி நர்மதா பாகிரதி சரயுநதி காவேரி அகலநந்தா உட்பட புனித நதியில் சேகரிக்கப்பட்ட 1008 தீர்த்தம் பிரசாதமாக வழங்கப்பட்டதுடன் அன்னதானமும் இடம்பெற்றது.

ஆசிரமத்தில் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி அற்புதங்கள் தொடர்பான நூல்களும் பக்தர்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளமை சிறப்புக் குரியது.

# இலக்குகளை நோக்கி மக்களை திருப்பிவிடும் வரவு - செலவு திட்டம்: பிரதமர் நரேந்திரமோடி புகழாரம்

மத்திய அரசின் 2023 – 24 காலப்பகுதிக்கான நிதிநிலை அறிக்கை, இலக்குகளை நோக்கிய சமூகத்தையும், விவசாயிகள் மற்றும் நடுத்தரவர்க்கத்தையும் உருவாக்கக் கூடிய, அவர்களின் கனவுகளை நனவாக்கக் கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்று கடந்த வாரம் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் சமர்ப்பித்த வரவு – செலவு திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

இந்த நிதியறிக்கை இந்திய அபிவிருத்திக்கான உறுதியான அடித்தளமாக விளங்குகிறது. சுதந்திரம் பெற்ற 75 வருடங்களின் பின்னர் முதல் தடவையாக இந்திய அபிவிருத்தி ஒரு அடித்தளம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் இந் நிதியறிக்கை பொருளாதார மேம்பாட்டை சார்ந்தது. ஏனெனில் இது ஏழைகள், நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் விவசாயிகளின் கனவுகளை நனவாக்கக் கூடியது என்று வியந்து பாராட்டியுள்ள இந்தியப் பிரதமர், முதல் தடவையாக கைத்தொழிலாளர்களுக்கான திட்டங்களை இவ்வரவு – செலவு திட்டம் உள்ளடக்கியுள்ளது என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

இந்திய மகளிர் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெண்களின் நிலையை மேலும் சீராக்கும் எனவும் தெரிவித்துள்ள பிரதமர் மோடி, கிராம பொருளாதாரத்தை மேம்படுத்த கிராம கூட்டுறவு அமைப்புகள் அச்சாணியாக நின்று செயற்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

'இவ் வரவு – செலவு அறிக்கை, பசுமை சக்தி, பசுமை வளர்ச்சி, பசுமை கட்டமைப்புகள் என்பனவற்றை மட்டுமின்றி பசுமை வேலை வாய்ப்புகளையும் எதிர்காலத்தில் இடைவிடாமல் ஏற்படுத்தக் கூடியது' என்று பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அசாம் தேயிலைத் தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்க முன்வந்திருக்கும் தொண்டு நிறுவனம்

அசாமின் பத்து லட்சம் கைவினைஞர்கள், தேயிலை கொழுந்து பறிப்போர் மற்றும் சிறு, குறு வர்த்தகர்களின் பார்வை குறைபாட்டை நீக்குவதன் மூலம் அவர்களை திறன்மிக்க சேவையாளர்களாக மாற்ற முடியும் எனத் தெரிவித்திருக்கும் அரச சார்பற்ற தொண்டு நிறுவனமொன்று தெரிவித்திருப்பதோடு இதை சாத்தியமாக்கும் திட்டங்களை செயற்படுத்த ஆரம்பித்துள்ளது.

அசாமிய தலைநகரமான குவாஹத்தியில் சமீபத்தில் 'விஷன் இஸ்பிரிங்' என்ற இத்தொண்டு நிறுவனத்தால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இத் திட்டத்தின் மூலம் அடுத்த ஐந்தாண்டு காலப்பகுதியில் 10 லட்சம் தேயிலைத் தொழிலாளர்கள், சிறு வர்த்தகர்கள் மற்றும் கைவினைஞர்களின் பார்வைத் திறன் பரிசோதிக்கப்படும் என்றும் இதன் பொருட்டு ஆறு லட்சம் மூக்குக் கண்ணாடிகள் தேவைப்படும் எனவும் இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் அன்சூ தனேஜா ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தை இவ்வாண்டு முழுவதும் செயல்படுத்துவதன் மூலம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் 13.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை மேலதிக வருமானமாகப் பெறக்கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஏராளமான அசாமிய தேயிலைத் தொழிலாளர்களுக்கு கண் பரிசோதனை செய்து கண்ணாடி அணியும் வசதி இல்லாததால் தோட்டங்களில் தொழில்திறன் இழப்பு ஏற்பட்ட வருமானத்தில் சரிவை அவை சந்திப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. 2013 இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், கண்ணாடி அணிந்த பின்னர் கொழுந்து பறிப்போரின் வேலைத்திறன் 22 சதவீத அதிகரிப்பை காட்டியிருப்பதாகவும் 50 வயதுக்கு மேற்பட்டோரிடம் இது 32 சதவீதமாக இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

தமது பணிகளைத் தாமே செய்து கொள்வதற்கு 600 மில்லியன் இந்தியர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் அவசியம் எனத் தெரியவந்துள்ளது.


பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

**பச்சை தேயிலைக் கொழுந்து /இறப்பர் பால் கேள்வி விலைமனுக்கோரல் முறைமையின் கீழ் விற்பனை செய்தல் – மார்ச் – ஏப்ரல் 2023**

**கேள்வி இலக்கம் : SLSPC/PL/Greenleaf/T-12/2023**

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களிலுள்ள பின்வரும் பெருந்தோட்டங்களின் பச்சை தேயிலை கொழுந்துகளை இரண்டு மாத காலத்திற்கு விற்பனை செய்வதற்காக கேள்வி விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பெருந்தோட்டத்தின் பெயர் | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை ரூபா | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரூபா |
|---|---|---|
| அலகொல அரச பெருந்தோட்டம் | 5,000/- | 100,000/- |
| கொட்டகங்க அரச பெருந்தோட்டம் | 5,000/- | 100,000/- |
| கல்பிஹில்ல அரச பெருந்தோட்டம் | 5,000/- | 100,000/- |
| விஹாரகல அரச பெருந்தோட்டம் | 5,000/- | 50,000/- |
| ஹாகல அரச பெருந்தோட்டம் | 5,000/- | 100,000/- |
| ஹெயார்பாக் அரச பெருந்தோட்டம் | 5,000/- | 100,000/- |
| ஹுன்னஸ்கிரிய அரச பெருந்தோட்டம் | 5,000/- | 100,000/- |
| ரங்கல அரச பெருந்தோட்டம் | 5,000/- | 100,000/- |
| வைத்தலாவ அரச பெருந்தோட்டம் | 5,000/- | 100,000/- |
| வுட்சைட் அரச பெருந்தோட்டம் | 5,000/- | 100,000/- |
| இறப்பர் பால் | (LATEX) | |
| வலஹன்தூவ அரச பெருந்தோட்டம் | 5,000/- | 50,000/- |

இதற்கான நிபந்தனைகளடங்கிய கேள்விப் படிவங்களை ரூபா 5000/- இற்கான தொகையைச் செலுத்தி 2023.02.08 முதல் 2023.02.21 அன்று பி.ப.4.00 வரை பன்விலயிலமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய அலுவலகத்தில் அல்து 2023.02.22 அன்று பி.ப.12.30 வரை இல.257, சிரிதம்ம மாவத்தை, கொழும்பு - 10 இலுள்ள அ.பெ.கூ. பிரதான அலுவலகத்திலும் கொள்வனவு செய்து கொள்ளலாம்.

மீளளிக்கப்படும் வைப்புத்தொகையை ஒவ்வொரு பெருந்தோட்டத்திற்கும் தனித்தனியாக சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் மக்கள்வங்கி முதலாம் நகரக்கிளை கணக்கு இலக்கம் 046100240000 933 இல் வைப்புச் செய்தல் அல்லது காசாளரிடம் செலுத்தி, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் அப்பற்றுச்சீட்டின் பிரதியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்படிவங்கள், வைப்புப்பற்றுச்சீட்டுகளுடன், கொழும்பு - 10, பெருந்தோட்டக் கூட்டுத்தாபனப் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023.02.22 அன்று பி.ப.1.00 இற்கு முன்னர் சேர்த்தல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் கேள்விமனுதாரர், ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட முன்னர், இலங்கையிலுள்ள முன்னணி வங்கியொன்றினால் வழங்கப்படும், குறித்த மாதத்திற்கான கணிப்பீட்டுச் சூத்திரத்திற்கமைவாக குறிப்பிடப்படும் மூன்று (03) மாத காலத்திற்கு செல்லுபடியாகும் வங்கிப்பிணையமொன்று சமர்ப்பிக்கப்படல் கட்டாயமாகும்.

2023.02.22 அன்று பி.ப.01.00 இற்கு கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக அவை, திறக்கும் குழுவின் முன்னிலையில் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் கொள்வனவாளர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். உரித்தான தினத்தன்று உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாத கேள்வி விலைமனுக்கள் தொடர்பாக கூட்டுத்தாபனம் பொறுப்புக்கூற மாட்டாதென்பதுடன், பெறுகைக் குழுவின் தலைவரின் தீர்மானம் இறுதித்தீர்மானமாக அமையும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**இலங்க அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்**
**257, சிரிதம்ம மாவத்தை, கொழும்பு - 10**
**2023.02.03**



1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் (அத் 460) 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு : AKU/LND 06/LA/106
காணி அமைச்சின் இல: 4/3/13/2019/PC/532

கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை எடுக்க அரசாங்கம் உத்தேசிக்கிறது மேலதிக விபரங்களுக்கு 2311/29 ஆம் இலக்க 2022.12 21 ஆம் திகதி கொண்ட அரசாங்கத்தின் அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : மாத்தறை |
| மாவட்டம் | : மாத்தறை |
| பிரதேச செயலகப் பிரிவு | : அக்குரஸ்ஸை |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : போபிட்டிய |
| கிராமத்தின் பெயர் | : கொரஹனகெலே அல்லது கிவுல்தெனிய முகலான |
| பட இலக்கம் | : ஆ.கி.ப. 551 இல் மேலதிக இலக்கம் 9 தாள் இலக்கம் 13 |
| துண்டு இலக்கம் | : 225 |

**கே.ஜீ.டி அநோஜா**
**பிரதேச செயலாளர்**
**காணி கொள்வனவு உத்தியோகத்தர்**
**அக்குரஸ்ஸ**

**2022 01 மாதம் 26 திகதி**
**அக்குரஸ்ஸ பிரதேச செயலகத்தில்**



**கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்**

இந்த விண்ணப்பமானது ப்ரோபேட் ஆவணத்தினை முத்திரையிடுவதற்கான குடியியல் சட்டக் கோவையின் பிரிவு 554U, (1977 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம்) கனடாவில் மனிடோபா எனும் மாகாணத்தில் அமைந்துள்ள சிட்டி ஒப் வின்னிபெக் எனும் இடத்தில் குடியிருந்து, காலஞ்சென்ற அமரர். குயின்டஸ் ஜெயகுமார் பர்னாந்து என்பவரின் இறுதி விருப்பாவணத்தினை மீள் முத்திரை இடுவதற்கான விண்ணப்பம் தொடர்பாக,

(காலஞ்சென்றவர்)

வழக்கு இல : DTS/ 38 /2022
தன்மை : விருப்பாவணம்
நடைமுறை : சுருக்கம்
பெறுமதி : ரூ.17,153,763/-

லூர்து மன்சூ பர்னாந்து
கனடா, மனிடோபா எனும் மாகாணம்,
சிட்டி ஒப் வின்னிபெக்
பின்வரும் அவரது அற்றோனி தத்துவக்காரர் மூலம் தோன்றுகின்றார்.

மேரி க்ரேட்டன் துல்சி இருதயநாதர் (திருமணத்திற்கு முன்னர்)
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, இலங்கை

(மனுதாரர்)

கனடாவில் மனிடோபா எனும் மாகாணத்தில் அமைந்துள்ள சிட்டி ஒப் வின்னிபெக் எனும் இடத்தில் குடியிருந்து, காலஞ்சென்ற அமரர். குயின்டஸ் ஜெயகுமார் பர்னாந்து என்பவரின் இறுதி விருப்பாவணம் தொடர்பாக த குயின்ஸ் பென்ச் வின்னிபெக்" இனால் 2021 ஏப்ரல் மாதம் 07 ஆம் திகதி வழங்கப்பட்ட வெளிநாட்டு ப்ரோபேட் ஆவணத்தினை முத்திரையிடுவதற்கான குடியியல் சட்டக்கோவையின் பிரிவு 554U, (1977 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம்) குடியியல் நடபடி முறைக்கோவை வெளிநாட்டு உயில்கள் மீள் முத்திரையிடுகின்ற சட்டக்கோவையின் கீழ் மேற்கொள்ளப்படும் விண்ணப்பத்தினை பிரசுரத்திலிருந்த 28 நாட்கள் முடிவடைந்த பின்னர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் பிரிவு XXXVIII B குடியியல் நடபடிமுறைக்கோவை (1977 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம் விண்ணப்பிக்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**2023 ஆம் ஆண்டு பெப்ரவரி 07 ஆம் திகதி**

**மனுதாரரின் சட்டத்தரணி**



நீர் வழங்கல் அமைச்சு

தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்

DNCWS

**கேள்விக்கோரல்**

**பெறுகை அறிவித்தல்**

**தலைமை அலுவலகத்திற்கு 01 வேன் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு 09 கெப் வண்டிகளை வாடகைக்கு பணியமர்த்தல் : (2023 ஆம் ஆண்டிற்கு)**

கொள்முதல் குழுவினால் தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரை செய்யப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| இடம் | வாகனத்தின் வகை | மீளச் செலுத்தப்படாத கட்டணம் (ரூ). | மனுப் பாதுகாப்பு (ரூ). | தேவையான தகுதி | ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய நபர் | மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| தலைமை அலுவலகம் (கொழும்பு) | வேன் | 4,000.00 | 40,000.00 | வாகனத்தின் உரிமையாளர்கள் அல்லது வாகனங்களை வாடகைக்கு விடும் நிறுவனங்கள் | பணிப்பாளர், (பெறுகை) தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இல-1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொட. | 2023 மார்ச் 01 மு.ப.10.00 |
| மாவட்ட அலுவலகம் (காலி) | டபள் கெப் | | 40,000.00 | | | |
| மாவட்ட அலுவலகம் (கண்டி) | டபள் கெப் | | 40,000.00 | | | |
| மாவட்ட அலுவலகம் (மாத்தறை) | டபள் கெப் | | 40,000.00 | | | |
| மாவட்ட அலுவலகம் (யாழ்ப்பாணம்) | டபள் கெப் | | 40,000.00 | | | |
| மாவட்ட அலுவலகம் (கேகாலை) | டபள் கெப் | | 40,000.00 | | | |
| மாவட்ட அலுவலகம் (வவுனியா) | டபள் கெப் | | 40,000.00 | | | |
| மாவட்ட அலுவலகம் (மட்டக்களப்பு) | டபள் கெப் | | 40,000.00 | | | |
| மாவட்ட அலுவலகம் (மாத்தளை) | டபள் கெப் | | 40,000.00 | | | |
| மாவட்ட அலுவலகம் (நுவரெலியா) | டபள் கெப் | | 40,000.00 | | | |

| | |
|---|---|
| ஒப்பந்த இலக்கம்: | DNCWS/PRO/ 2023/Vehicle Hiring/01 |
| மனு செல்லுபடியாகும் காலம்: | மனு திறக்கப்பட்ட நாளிலிருந்து 90 நாட்கள் வரை |
| மனுப் பாதுகாப்பு: | *ஒரு மனுதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்களை எடுத்தால், ஒரு மனு பாதுகாப்பு (மொத்த தொகையுடன்) பெற்றுக்கொள்ள முடியும். |
| நிதியளிப்பு நிறுவனம்: | UNDP (வேனுக்கு) & GoSL (கெப் வண்டிக்கு) |
| அடிப்படைத் தேவைகள்: | வாகனப் பதிவு - 2012 ஆண்டு அல்லது அதற்குப் பின்னர் மற்றும் வாகனப் உற்பத்தி - 2007 ஆண்டு அல்லது அதற்கு பின்னர் |

**மேற்குறிப்பிடப்பட்ட விபரங்களுக்கான பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரரின் கடிதத்தலைப்பில் எழுதப்பட்ட கோரிக்கை மற்றும் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திற்கு செலுத்தி (**கணக்கு இலக்கம் 0007040440 இற்கு இலங்கை வங்கியில் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில்** வரவு வைக்கப்பட்ட மீளச் செலுத்தப்படாத விண்ணப்பக் கட்டணம் செலுத்திய ரசீதினை சமர்ப்பித்த பின்னர் மனு ஆவணங்கள் வழங்கப்படும்.
2. **2023.02.28** ஆம் திகதிவரை **09:00 மணி முதல் 16:00** மணி வரை சாதாரண வேலை நாட்களில் வரவு வைக்கப்பட்ட ரசீதின் அசல், நகலை தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவில் சமர்ப்பித்து மனு ஆவணங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.
3. ஆர்வமுள்ள மனுதாரர்கள் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திடமிருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். மேலும் சாதாரண வேலை நாட்களில் ஆவணங்களை வழங்கும் நிலையங்களிலிருந்து மனு ஆவணங்களை இலவசமாக பரிசீலனை செய்துகொள்ள முடியும்.
4. மனு ஆவணங்களை திணைக்களத்தின் 2வது மாடியில் **(கொள்முதல் பிரிவில்)** வைக்கப்பட்டுள்ள **டெண்டர் பெட்டியில்** இடலாம். அல்லது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவு தபால் அல்லது பொதிச் சேவை மூலம் அனுப்ப முடியும்.
5. மனுதாரர்கள் / அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் **2023.03.01 ஆம் திகதி மு.ப.10:15 மணிக்கு அதே முகவரியில் மனு திறக்கப்படும். தாமதமான மனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பித் அனுப்பப்படும்.**
6. **மனுப் பாதுகாப்பு ஆனது 2023.06.28** ஆம் திகதி வரை செல்லுபடியாகும், மற்றும் பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் இலக்கம் 1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொட என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகை குழு,
தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்,
இல-1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொட.
2023.02.07



**பெயர் மாற்றம்**

கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 145ஏ மரைக்கார் வீதி, வாழைச்சேனை 04 எனும் விலாசத்தில் வசிக்கும் **நிஹாஸ்** ஆகிய எனது பிறப்பு சான்றிதழில் **'நீஹாஸ்'** என்று உள்ளது எனது உறவினர்கள் **நிஹாஸ்** என்று அழைப்பதாலும் எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் **நிஹாஸ்** என்று மாற்றவுள்ளேன் என இத்தால் இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் தெரியப்படுத்துகிறேன்.

**ஜே. நிஹாஸ்**



கடற்றொழில் அமைச்சு

வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

**பானதுரை, நில்வெல்ல, சுதுவெல்ல,கிரிந்த மற்றும் தங்காலை மீன்பிடி துறைமுகங்களுக்கான CCTV கேமரா அமைப்புகளை வழங்குதல், நிறுவுதல், செயல்படுத்தல் மற்றும் பராமரித்தல்.**

**ஒப்பந்த இலக்கம் - CFHC/PD/T/CCTV/FH/2023/08 (I-V)**

இலக்கம் 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை கொழும்பு 15 இல் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் 2023.02.22 ஆம் திகதி பி.ப.02.00 மணி வரை உற்பத்தியாளர்கள், முகவர்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்து மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்களுக்காக முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

இது தொடர்பான அனைத்து விபரங்களையும் கூட்டுத்தாபனத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் **(www.cfhc.gov.lk)** இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,
இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,
கொழும்பு 15.



கடற்றொழில் அமைச்சு

வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

**கிரிந்த மீன்பிடித் துறைமுகத்தில் நங்கூரங்களிலுள்ள பயன்படுத்தப்படும் மணல் அகற்றும் வெளிகொவ்வா இயந்திரத்தினை துண்டித்து அப்புறப்படுத்துவதற்கான விலைமனுக்கோரல்**

**CFHC/PD/DIS/DRG-WELI/RT/2023/03**

கிரிந்த மீன்பிடித் துறைமுகத்தில் நங்கூரங்களிலுள்ள பயன்படுத்தப்படும் அகற்றப்பட்ட மணல் இயந்திரத்தினை துண்டித்து நீக்குவதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2023.02.23 ஆம் திகதி **பி.ப.02.00** மணி வரை கோரப்படும். இது தொடர்பான அனைத்து விபரங்களையும் கூட்டுத்தாபனம் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் **(www.cfhc.gov.lk)** இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்கோரலுக்கான விண்ணப்பத்தினை பெற்றுக்கொள்வதற்கு மீள்பெறமுடியாத தொகையாக **ரூ.5,000.00** மற்றும் மீள்பெறக்கூடிய உத்தரவாதப்பிணை தொகையாக **ரூ.400,000.00** செலுத்த வேண்டும். மேலும், விலைமனு வழங்கப்பட்டால் **ரூ.1,000,000.00** செயல்திறன் உத்தரவாதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர்,
வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,
இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,
கொழும்பு 15.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம்

# பெறுகை விளம்பரம்

**தேசிய இயந்திரோபகரண நிறுவனத்தின் பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்கள், உடைந்த வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களை விற்பனை செய்வதற்கான கேள்வி கோரல்**

**கேள்வி இல. SDSQ/2022/S-2/V/P/M/02**

1. இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபன பெறுகைக்குழுவின் தலைவரினால் தேசிய இயந்திரோபகரண நிறுவனத்தின் பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்கள், உடைந்த வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களை (Scrap vehicles, Plant & machinery) விற்பனை செய்வதற்காகத் தகைமையுள்ள உள்நாட்டு விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. சகல விலைமனுதாரர்களும் உருப்படியின் முழுமையான பெறுமதியின் 10% பெறுமதியான 2023-06-27ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் பிணைமுறியொன்றை (வங்கிப் பிணை முறி / விலைக்கோரல் வைப்பு) சமர்ப்பித்தல் வேண்டும்.
3. மீளளிக்கப்படாத கட்டணமான 1000.00 ரூபாவை செலுத்திய பின்னர் தலைமை அலுவலகத்தின் 7ஆம் மாடியிலுள்ள நிதிப் பிரிவிற்குச் செலுத்தியன் பின் 2023-02-07ஆம் திகதி முதல் கேள்விப் படிவங்களை 5ஆம் மாடியில் அமைந்துள்ள வழங்கல் பிரிவிலிருந்து வேலை நாட்களில் மு. ப. 9.00 மணிக்கும் பி.ப. 4.00 மணிக்குமிடையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. உங்கள் விலைமனுக்களை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு கடித உறைகளில் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு தலைவர், பெறுகைக்குழு, அரச பொறியியல் கூட்டுத்தாபனம், இல. 130, டபிள்யூ.ஏ.டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு-02 எனும் முகவரிக்கு 2023-02-28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் பிரதான அலுவலக தரை மாடியிலமைந்துள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடுதல் அல்லது அந்நேரத்திற்கு முன்னர் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.
5. விலைமனு ஆவணங்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்கள், உடைந்த வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களை நிறுவனத்தின் அனுராதபுரம், கொலொன்னாவ, மகியங்கனை, தங்காலை, பேலியகொட மற்றும் ஏக்கல அரச பொறியியல் கூட்டுத்தாபன வளவுகளில் பரீட்சித்துப் பார்க்கலாம். (தொலைபேசி இல. 011-2314554)
6. மேலதிக விபரங்களுக்கு இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனப் பிரதான பெறுகை அதிகாரியைத் தொடர்புகொள்ளவும். தொ.பே. இல. 0112434485.
7. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம்,**
**இல. 130, W.A.D. ராமநாயக்க மாவத்தை,**
**கொழும்பு -02.**

---

**அருட்பணி நிஸாந்த பியும் தர்ஸன பெர்ணாண்டோ இலங்கை திருச்சபை குருணாகலை மறைமாவட்டத்தின் 7வது பேராயராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்**

இலங்கைத் திருச்சபையின் மெட்ரொபொலிடனான கண்டபரியின் பிரதம பேராயர் அதிஉயர் ஜஸ்டின் வெல்பி ஆகிய நான், இலங்கைத் திருச்சபை யாப்பின் 9வது அத்தியாயம் 3வது கட்டளையின் கீழ் அருட்பணி நிஸாந்த பியும் தர்ஸன பெர்ணாண்டோ அவர்கள் இலங்கைத் திருச்சபை குருணாகல் மறைமாவட்டத்தின் 7வது பேராயராக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதை அறியத்தருகின்றேன்.

இத் தெரிவு தொடர்பாக எவருக்கேனும் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் இவ் அறிவித்தல் கிடைக்கப்பெற்று 14 நாட்களுக்குள் எழுத்து மூலமாக குருணாகலை மறைமாவட்ட பதிவாளருக்கு (விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன) அனுப்பி வைக்கவும்.

Mr. Dinesh Jayawardena,
The Registrar,
Diocese of Kurunagala,
154, D.S. Senanayake Vidiya,
Kandy,
Email: rajivec72@gmail.com

**இலங்கைத் திருச்சபையின் மெட்ரொபொலிடனான கன்டபரியின் பிரதம பேராயர் அதி உயர்**
**ஜஸ்டின் வெல்பி அவர்கள்**

---

# அறிவித்தல்

**தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபை**
**பாலதக்ஷ மாவத்தை, காலி.**

**தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபையில் வெற்றிடமாகியுள்ள கணக்காளர் மற்றும் நிருவாக உத்தியோகத்தர் பதவிகளுக்காக ஒரு வருட கால ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல்.**

1995ம் ஆண்டு 01ம் இலக்க பிரமாண குறிப்பின் கீழ் தென் மாகாண சபையின் பிரதான அமைச்சுக்கு இணைவாக ஸ்தாபிக்கப்பட்ட தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபைக்கு,

1. **கணக்காளர் பதவி**
2. **நிருவாக உத்தியோகத்தர் பதவிகளுக்காக**

அரச சேவையில் ஓய்வு பெற்ற கணக்காளர் ஒருவர் மற்றும் நிருவாக உத்தியோகத்தர் ஒருவரையும் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவ் ஆட்சேர்ப்பு தொடர்பான முழு விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் என்பன (http:/www.spda.lk) எனும் இணையத் தளத்தில் பிரசுக்கப்பட்டுள்ளது. விண்ணப்ப முடிவு திகதி 2023.02.20ம் திகதி ஆகும்.

**பணிப்பாளர் நாயகம் (பதில் கடமை)**
**தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபை**

---

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

Repeat Your Ad For Better Offers

---

# (262 ஆவது அதிகாரம் ) கட்டளைச் தேர்தல் நிறுவன உள்ளூராட்சி

## சட்டத்தின் அறிவித்தல் கீழான பிரிவின் எ 66

2012 இலக்கம் 22 ஆவது உள்ளூராட்சி நிறுவன தேர்தல்கள் (திருத்த) சட்டத்தின் திருத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரிவின் எ 66 எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தின் தும்பனே பிதேச சபையின் தவிசாலரை தெரிவு செய்வதற்கான முதலாவது பொதுக் கூட்டம் 2023.02.15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு தும்பனே பிரதேச சபை ஒன்றுகூடல் அரங்கில் நடைபெறும் என்பதை இத்தாள் அறிவிக்கிறேன்.

**எச்.ஹேரத்.பீ.யூ.எம்.எம்.**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**உள்ளூராட்சித் திணைக்களம்**
**மத்திய மாகாணம்.**

**2022 பிப்ரவரி 06 ஆம் திகதி**
**மாகாண சபை கட்டிடத் தொகுதி**
**பல்லேகலை,**
**குண்டசாலை.**

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# கேள்விக்கோரல்

## வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சேவை வழங்கல்

1. **வீதி அபிவிருத்தி அதிகார சபையின் (RDA) வழங்கல் சபைத் தலைவரினால்** வீதி அபிவிருத்தி அதிகார சபைக்காக கீழ்வரும் பணிகளை மேற்கொள்வதற்கு தகைமைகளையுடைய கேள்விதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விக்கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் | விபரம் | கால வரையறை | பாதுகாப்பு பிணை (ரூ) | கேள்விக்கு முந்திய கூட்டம் |
|---|---|---|---|---|
| RDA/DPR/SEC (Plant)/2023/05 | இங்கிரிய, கேரகல, கொட்டதெனியாவ, மெதயாய கொத்மலை, பலாங்கொடை, பொலநறுவை, மெதவாச்சி, சூரியவெவ, அம்பன்பொல, கல் அரைக்கும் இயந்திரத்திற்கான பாதுகாப்பு சேவை வழங்கல் | ஒரு வருடம் | 530,000.00 | 2023.02.21 மு.ப 10.00 |
| RDA/DPR/LABOUR(Plant)/2023/06 | கேரகல, மெதயாய, கொத்மலை, பொலநறுவை, மெதவாச்சி, சூரியவெவ, அம்பன்பொல மற்றும் கல் தூள் ஆலை பெரமுசு காட்சிப்படுத்தல் வளாகம் மற்றும் சூரியவெவ, அம்பன்பொல, கல் அரைக்கும் இயந்திரத்திற்கான தேர்ச்சியற்ற ஊழியர்களை வழங்கல் | ஒரு வருடம் | 725,000.00 | 2023.02.21 மு.ப 10.30 |

2. **வீதி அபிவிருத்தி அதிகார சபையே** செயற்படுத்தப்படும் முகவர் நிறுவனமாகும்.
3. தேசிய போட்டி நடைமுறைக்கேற்ப கேள்விக்கோரல் நடாத்தப்படும்.
4. கேள்விகள், கோரப்படும் இறுதித் திகதியிலிருந்து **91 நாட்கள்** செல்லுபடியாக வேண்டும்.
5. கேள்விகள் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பு பிணை பெறுமதிக்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் சேவை பெறுநர் பெயருக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு பிணையுடன் **(2023.06.28 வரை செல்லுபடியாகும்)** சமர்ப்பித்தல் வேண்டும். பாதுகாப்பு பிணையற்று முன்வைக்கப்படும் எந்தவொரு கேள்வியும் நிராகரிக்கப்படும்.
6. வழங்கல் சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, 4ஆவது மாடி, "மகநெகும மஹமெதுர", இலக்கம். 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்லயில் இலவசமாக கேள்விப்பத்திரங்களைப் பார்வையிடலாம்.
7. **2023.02.07** முதல் **2023.02.28** வரை காரியாலய வேளைகளில் **மு.ப.09.00** மற்றும் **பி.ப.03.00** க்கு இடையில் பணிப்பாளர் நாயகம், வீதி அபிவிருத்தி அதிகார சபை பெயரில் **இலங்கை வங்கியின் நிறுவன கிளை கணக்கிலக்கம் 0000001943 க்கு** ஒரு கேள்விப்பத்திரமொன்றுக்கு மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூ.4,320.00 (வட் வரியுடன்)** கேள்விக்கட்டணத்தை செலுத்தி பணிப்பாளர் - வழங்கல், வழங்கல் சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, 4ஆவது மாடி, "மகநெகும மஹமெதுர", இலக்கம். 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு எழுத்து மூலமான கடிதத்தை சமர்ப்பித்து ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் முழுமையான கேள்விப்பத்திரத்தை கொள்வனவு செய்திட முடியும். கேள்விப்பத்திரத்தை கொள்வனவு செய்யும் போது முதல் கொடுப்பனவாளர்கள் நிறுவன பதிவு திணைக்களத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும். **2023.03.01** ஆம் திகதி **பி.ப 2.00** மணிக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடையும்.
8. முத்திரையிடப்பட்ட கேள்விகள், **இரண்டு பிரதிகளுடன்** தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, வழங்கல் சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, 4ஆவது மாடி, " மகநெகும மஹமெதுர", இலக்கம். 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு இறுதித் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலமாக அனுப்பவும் அல்லது நேரில் ஒப்படைக்கவும். தயவு செய்து அனுப்பும் கேள்விக்கோரல் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"...............வழங்கல்"** எனக் குறிப்பிடல் வேண்டும்.
9. **வீதி அபிவிருத்தி அதிகார சபை, 4ஆவது மாடி, "மகநெகும மஹமெதுர", இலக்கம். 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்லயில்** அமைந்துள்ள வழங்கல் பணிப்பாளர் காரியாலயத்தில் கேள்விக்கோரல் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த பின்னர் அவை திறக்கப்படும். இச்சந்தர்ப்பத்திற்கு கேள்விதாரர்கள் மற்றும் அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு கலந்துகொள்ள முடியும்.
10. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து **011-2884790** என்ற தொலைபேசி இலக்கத்திற்கு காரியாலய வேளைகளில் **பணிப்பாளர் (வழங்கல் சபை), வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு** அழைக்கவும்.

**தலைவர்,**
**வீ.அ.அ.ச வழங்கல் சபை,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

---

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை

## வடமத்திய மாகாணம்

வட மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2023ஆம் ஆண்டில் மேற் கொள்ளப்படவுள்ள வீதி பராமரிப்புக்கள் உட்பட கருமங்களிற்காக பின்வரும் தொகுதிகளின் கீழ் தார் உருப்படிகளை வழங்குவதற்காக கேள்வி விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பெறுகை இலக்கம் | தொகுதி | கேள்விப்பிணையத்தின் பெறுமானம் ரூபா | கேள்விப்பிணையத்தின் செல்லுபடி திகதி | மீளளிக்கப் படாத தொகை ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | NCP/PRDA/HOT/BITUMEN/2023/01 | சூடான தார் வழங்கல் (80/100 HOT Bitumen) - போக்குவரத்து இறக்குதல் மற்றும் அடுக்கி வைத்தல் உட்பட | 199,721.00 | 2023.07.07 | 5,500.00 |
| 02 | NCP/PRDA/EMULSION/2023/01 | திரவதார் வழங்கல் (CSS 1, CRS1) போக்குவரத்து இறக்குதல் மற்றும் அடுக்குதல் உட்பட | 111,012.00 | 2023.07.07 | 4,000.00 |
| 03 | NCP/PRDA/MC30 (CUT BACK)/2023/01 | MC 30 (CUT Back வழங்குதல்) போக்குவரத்து இறக்குதல் மற்றும் அடுக்கி வைத்தல் உட்பட | 67,812.00 | 2023.07.07 | 2,500.00 |

01. இதற்கான கேள்வி விண்ணப்பப்படிவங்களை அநுராதபுரம் எச்.பீ. சேமசிங்ஹ மாவத்தையிலுள்ள மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான அலுவலகத்தில் 2023.02.08 முதல் 2023.02.23 வரை அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 - பி.ப. 15.00) இடைப்பட்ட காலங்களில் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை நிறுவனத்தில் காசாகச் செலுத்திய பின்னர் அல்லது பொது முகாமையாளரின் பெயரில் இலங்கை வங்கியின் கணக்கு இலக்கம்: 0001472049 என்ற கணக்குக்கு வைப்புச் செய்து அப்பற்றுச் சீட்டை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

02. இப் பெறுகைக்காக கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகும் வண்ணம் வணிக வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் கேள்விப் பிணைய மொன்று (மாதிரிப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) சமர்ப்பித்தல் வேண்டும். அல்லது குறித்த தொகையை பொது முகாமையாளரின் பெயரில் இலங்கை வங்கியின் கணக்கு இலக்கம்: 0001472049 என்ற கணக்கில் வைப்புச் செய்து அப் பற்றுச்சீட்டை மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அதற்கான அனைத்து ஆவணங்களினதும் உறுதிப் படுத்தப்பட்ட பிரதிகளுடன் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி தனித்தனி உறைகளில் சேர்த்து மீண்டும் அவற்றை ஒருறையில் உள்ளிட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் உரித்தான பெறுகை இலக்கம் மற்றும் உரிய தொகுதியைக் குறிப்பிட்டு 2023.02.24 அன்று பி.ப. 2.00 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது நேரடியாகக் கொண்டுவந்து அதே முகவரியிலுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம்.

04. கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக பின்வரும் முகவரியில் அவை திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரர்கள் அல்லது பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

05. இது தொடர்பான மேலதிக தகவல்களை பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகப் பெற்றுக் கொள்ளலாம்.

06. இப் பெறுகை கோரல் மற்றும் வழங்கல் தொடர்பாக பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

**தலைவர், பெறுகைக்குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (வமமா),**
**எச். பி. சேமசிங்ஹ மாவத்தை,**
**அநுராதபுரம்.**
**தொ. பே. இல. 025-2222505, 025-2224459.**

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service

# எதிர்கட்சித்தலைவர் தனது கடமையை மறந்து நடந்துகொள்கின்றார்

## இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க குற்றச்சாட்டு

(அக்குறணை குறுப் நிருபர்)

எதிர்கட்சித்தலைவர் தனது கடமையை மறந்து நடந்து கொள்வதாக இளைஞர் விவகார விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோகன திசாநாயக்க குற்றம்சாட்டியுள்ளார்.

மாத்தளை உக்குவளை பிரதேசத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலுக்கான கட்சி அங்கத்தவர்களை தெளிவுப்படுத்தும் கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வங்குரோத்து நிலையை அடைந்துள்ள சில அரசியல் கட்சிகள் நாட்டில் தேர்தல் பற்றிய பயமொன்றை உருவாக்கி வருகின்றனர். ஆனால் அரசு என்ற வகையில் எந்த தேர்தலுக்கும் நாம் பயப்படப்போவது இல்லை. எந்த தேர்தலுக்கும் முகம் கொடுக்க நாம் தயாராகவுள்ளோம்.

நாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் எதிர்க்கட்சித் தலைவர்கள் இருந்துள்ளனர். ஆனால் எவரும் தற்போதைய தலைவர் போன்று நடந்து கொள்ளவில்லை.

ஐ.எம்.எப். நிறுவனத்தின் உதவிகள் இன்னும் சிறிது காலத்தில் கிடைக்கவுள்ளது. அதன்பின்னர் பெருமளவு பொருளாதார நெருக்கடிகள் நீங்கும் என அவர் தெரிவித்தார்.

### கொட்டகலையில் இராமகிருஷ்ண மிஷன் சிவானந்த நலன்புரி நிலையம்



தலவாக்கலை குறுப், ஹற்றன் விசேட நிருபர்கள்

கொட்டகலை ஹரிங்டன் பகுதியில் இராமகிருஷ்ண மிஷன் சிவானந்த நலன்புரி நிலையமொன்றினை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இந்நிகழ்வு நேற்று முன் தினம் (5) ஸ்ரீமத் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ராஜேஸ்வரானந்த ஜீ மஹாராஜ் தலைமையில் நடைபெற்றது. கட்டடத்தை அமைப்பதற்கு இராமகிருஷ்ண மிஷனுக்கு இரண்டு ஏக்கர் காணியை அன்பளிப்பாக வழங்கிய ஸ்ரீமான் விஜயபாலன், இராமகிருஷ்ண மிஷன் நிர்வாகிகளால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயத்தின் இந்திய உதவி தூதுவர் கலாநிதி ஆதிரா, இலங்கை சேவா சர்வதேச அறக்கட்டளையின் தலைவர் ஸ்ரீமான் விஜயபாலன், சங்கைக்குரிய திஸ்ஸமாராம தம்மஜோதி தேரர், ஸ்ரீமத் கொழும்பு ராமகிருஷ்ண மிஷன் சுவாமி ராஜேஸ்வரானந்த ஜீ மஹாராஜ், ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்த ஜீ மஹாராஜ் என பலரும் கலந்து கொண்டனர்.

# அமரர் ஆறுமுகன் நினைவாக கவிதை, கட்டுரை போட்டிகள்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளராகவிருந்த அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பிறந்த தினம் மற்றும் சிரார்த்ததினத்தை முன்னிட்டு கவிதை, கட்டுரைப் போட்டிகள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஊடகப்பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இ.தொ.காவின் சிரேஷ்ட ஊடக இணைப்பாளர் தேவதாஸ் சவரிமுத்து தெரிவித்துள்ளார்.

**கவிதைக்கான தலைப்புகள் வருமாறு:**

தடம் பதித்த தானைத் தலைவன், இலக்கு நோக்கி இனிய பயணத்தில் ஆறுமுகன் தொண்டமான்,

பாட்டாளி வடுதலையின் கூட்டாளி, தலைவரது புகழைச் சொல்ல நாள் போதுமா,

உழைப்போருக்கு தோழன், ஏய்த்து பிழைப்போருக்கு...

**கட்டுரைக்கான தலைப்புக்கள்:**

ஆளுமையின் அடையாளம்



அமரர் ஆறுமுகன் தொண்டமான், இன்றைய மலையகத்தின் இனிய நினைவுகளில் அவர், அமரர் ஆறுமுகன் தொண்டமானின் அரசியல் பாதை, இளைய தலைமுறையின் இங்கிதமான வழிகாட்டி, சமூக எழுச்சிக்கு வித்திட்ட வீரமகன்

கவிதை 150 சொற்களுக்குள்ளும், கட்டுரை 800 சொற்களுக்குள்ளும் உள்ளடங்கி இருக்க வேண்டும். படைப்புக்கள் A4 தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்பட வேண்டும். பெயர், முகவரி தனியாக ஒரு தாளில் எழுதப்பட்டு இணைக்கப்பட வேண்டும்.

ஏற்கனவே அச்சு, இலத்திரனியல் ஊடகங்களில் வெளியானவை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

தேர்ந்தெடுக்கப்படும் படைப்புக்களில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் படைப்புகளுக்கு சன்மானமும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டு அவை தேசிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும்.

படைப்புக்கள்; 15.03.2023க்கு முன்னர் பதிவுத் தபாலில் 'போட்டி ஏற்பாட்டாளர், இ.தொ.கா, இல. 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு தொடர்புக்கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 071 6876548/ 0704329131




# சாரதி இன்றி இயங்கிய டிராக்டர் டிக்கோயாவில் சம்பவம்

டிக்கோயா தோட்டத்தில் சாரதி இன்றி இயங்கிய டிராக்டர் ஒன்று ஓடைக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதுடன் சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் டிக்கோயா பகுதியில் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

டிக்கோயா தோட்ட தொழிற்சாலையின் களஞ்சியசாலைக்கு மரக் கட்டைகளை ஏற்றிச் சென்ற டிராக்டர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது, திடீரென தானாக இயங்கி அருகில் இருந்து ஓடைக்குள் கவிழ்ந்துள்ளது. இவ்வாறு தானாகவே இயங்கிய ட்ராக்டரை நிறுத்துவதற்கு சாரதி முயற்சித்த போது படுகாயமடைந்து டிக்கோயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

# கம்பளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் தைப்பூச மஹோற்சவம்

கம்பளை நிருபர்



கம்பளை திருவருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவில் தைப்பூச மஹோற்சவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணிக்கு விசேட வசந்தமண்டப பூஜையைத் தொடர்ந்து ஸ்ரீ விநாயகர் ஸ்ரீ வள்ளி ஸ்ரீ தேவயானி சமேத ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருத்தேர் பவனி நடைப்பெற்றது. இதில் அதிகமான பக்த அடியார்கள் கலந்துகொண்டு விஷேட பூஜைகளில் கலந்துகொண்டனர். தேர் பவனி வெளி வீதி வருகை தந்து அனைத்து பக்த அடியார்களும் தேர் வடம் பிடித்து இழுத்தனர், இதில் கலந்துகொண்ட அதிகளவான பக்த அடியார்களுக்கு இரவு அன்னதானமும் வழங்கி வைக்கப்பட்டது.

# மலசலகூட கழிவுகளால் நீர்நிலைகளுக்கு பாதிப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி நகரப்பிரதேசங்களில் கழிவுகளால் நீர்நிலைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வீடுகள், வியாபார நிறுவனங்களிலிருந்து வெளியேற்றப்படும் மலசலகூட கழிவுகள் பிரதேச நீர்நிலைகளுக்கு விடப்படுவதாக பிரதேசவாசிகள் முறையிடுகின்றனர்.

இப்பிரதேசத்தில் பெரும்பாலானவர்களுக்கு மலசலகூட வசதி இருந்தும் அவை நிறைந்த பின்னர் அவற்றை முறையாக நீக்காது இந்நீர் நிலைகளுக்குத் திறந்து விடுவதால் பெரும் சுகாதார அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். பெரும்பாலானவர்கள் மலசல கூட கழிவுகளை களுகங்கைக்கு திருப்பி விடுவதாலும் இந்நிலைமை உருவாகி வருவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

எனவே அரச அதிகாரிகள் மேற்படி மலசலகூட பிரச்சினைகளை இனங்கண்டு கழிவுகளை அகற்றுவதற்கான வழிமுறைகளை ஒழுங்கு படுத்திக் கொடுப்பதுடன் சட்டதிட்டங்களை மீறும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## வடக்கின் உதயம்

# சாவகச்சேரி மதுவரி திணைக்களத்திற்கு அருகில் மதுபான விற்பனை: ஒருவர் கைது



யாழ்.விசேட நிருபர்

மதுவரி திணைக்களத்திற்கு அருகிலுள்ள வீடொன்றில் சட்டவிரோதமான முறையில் மதுபானம் விற்பனை செய்த நபரொருவரை யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பௌர்ணமி தினமான நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி மது வரி திணைக்கள அலுவலகத்திற்கு அருகிலுள்ள வீடொன்றில் சட்டவிரோதமான முறையில் நபரொருவர் மதுபான விற்பனையில் ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் வீட்டை முற்றுகையிட்டு, சோதனை நடத்தினர்.

இதன்போது வீட்டிலிருந்து பியர் மற்றும் சாராயம் என்பன பொலிஸாரினால் மீட்கப்பட்டதுடன் அங்கிருந்த நபரை மதுபானம் விற்பனை செய்த குற்றத்தில் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரையும், மீட்கப்பட்ட மதுபான போத்தல்களையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# முறையான மேய்ச்சல் நிலங்கள் இன்மை; கால்நடைகளால் விவசாய நிலங்களுக்கு பாதிப்பு

(தலைமன்னார் விஷேட நிருபர்)



மன்னார் மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பாளர்களுக்கு சரியான மேய்ச்சல் நிலங்கள் இன்மையால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கால்நடை வளர்ப்போருக்கு மேய்ச்சல் நிலம் அடையாளப்படுத்தி கொடுக்காமையால் விவசாய நெற்செய்கை காலத்தில் கால்நடைகளை தகுந்த இடங்களுக்கு கொண்டுசெல்லமுடியாமல் விவசாயம் பாதிப்புகளுக்குள்ளாகி வருவதாக தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில் விவசாயிகள் கருத்து தெரிவிக்கையில்,

பயிர்கள் கால்நடைகளால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக நானாட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பல கிராமங்களிலும் முருங்கன் குளத்தின் கீழ் உள்ள ஒலுமடு பகுதியிலுள்ள விவசாய நிலங்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## புங்குடுதீவு வைத்தியசாலையில்

# அம்புலன்ஸ் வசதியின்மையால் நோயாளர்கள் பாதிப்பு

கோப்பாய் குறுப் நிருபர்

யாழ்.புங்குடுதீவு வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டி பழுதடைந்துள்ளமையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டப்படுகிறது. புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலைக்கு 2017 இல் வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டியினூடாகவே நயினாதீவு, நெடுந்தீவு பிரதேசத்தில் வாழ்கின்ற நோயாளிகளை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்நிலையில் அம்புலன்ஸ் வண்டியானது கடந்த ஏழு மாதங்களாக பழுதடைந்த நிலையில் யாழ்ப்பாணத்திலுள்ள வாகன திருத்துமிடமொன்றில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இதனால் சுமார் 25 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைக்குரிய அம்புலன்ஸ் வண்டியினையே அவசர தேவைகளுக்கு பயன்படுத்துகின்ற சூழ்நிலை எழுந்துள்ளது. இதனால் அவசர சிகிச்சைக்குரிய நோயாளிகள் அம்புலன்ஸ் வண்டிக்காக பல மணித்தியாலங்கள் காத்திருக்கும் அவலநிலை தொடர்ந்த வண்ணமுள்ளது.

எனவே அதி கஷ்டப்பிரதேசத்தில் வாழும் தீவக மக்களின் அம்புலன்ஸ் வண்டி தேவையை பூர்த்தி செய்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

# மாடுகள் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

கோப்பாய் குறுப் நிருபர்

யாழ்.வடமராட்சி துன்னாலைப் பகுதியில் மாடுகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரம் மாத்திரம் 5 மாடுகள் திருடப்பட்டுள்ளதாகவும் இதுவரை 50 இற்கு மேற்பட்ட மாடுகள் திருடப்பட்டுள்ளதாகவும் பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பிரதேசங்களில் வசிக்கும் சிலரே திருட்டில் ஈடுபடுவதாக பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர்.

திருடப்படும் மாடுகள் இறைச்சிக்காக களவாடப்படுவதாகவும் பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிகாரிகளிடம் முறைப்பாடு செய்தும் பலன் கிடைக்கவில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்படும் மாடுகள் களவாடப்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.



யாழ்ப்பாணம் இணுவில் கந்தசுவாமி கோவிலில் தைப்பூசத் திருநாளை முன்னிட்டு விசேட பூஜை நிகழ்வுகள் இடம்பெற்றன. (படம்: யாழ்.விசேட நிருபர் யாழ்ப்பாணம்)

# மோட்டார் சைக்கிள் – ஹயஸ் ரக வாகனத்துடன் மோதி கோர விபத்து: 19 வயது இளைஞன் பலி, ஒருவர் படுகாயம்



யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம் தாவடி பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை, மோட்டார் சைக்கிள் ஹயஸ் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞனொருவன் உயிரிழந்துள்ளதுடன் மற்றொரு இளைஞன் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மருதனார்மடம் பகுதியிலிருந்து கொக்குவில் நோக்கி மூன்று மோட்டார் சைக்கிள்கள் அதிக வேகத்தில் பயணித்ததாகவும் அதில் 2ஆவதாக வந்த மோட்டார் சைக்கிள் யாழ்ப்பாணத்திலிருத்து மருதனார்மடம் நோக்கி பயணித்த ஹயஸ் வாகனத்துடன் நேருக்கு நேர் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் யாழ்.ஒட்டுமடம் பகுதியை சேர்ந்த அனுஜன் (வயது 19) என்ற இளைஞன் உயிரிழந்துள்ளதுடன் ஜெயசீலன் ரகுசான் (வயது 17) என்ற இளைஞன் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். படுகாயமடைந்த இளைஞனுக்கு செயற்கை சுவாசம் வழங்கப்பட்டுவருவதாக கூறப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# சர்வதேச செய்திகள்

# சிரியா மற்றும் துருக்கியில் பயங்கர பூகம்பம்: 1400க்கும் அதிகமானோர் பலி

## பல நகரங்களிலும் பெரும் அழிவு



சிரிய நாட்டு எல்லைக்கு அருகில் தென் கிழக்கு துருக்கியில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த பூகம்பம் ஒன்றில் 1400க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். மக்கள் உறக்கத்தில் இருந்தபோது இடம்பெற்ற இந்த பூகம்பத்தில் பலரும் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர்.

காசியன்டெப் நகருக்கு அருகில் உள்ளூர் நேரப்படி நேற்று (06) அதிகாலை 4.17 மணி அளவில் 17.9 கிலோமீற்றர் ஆழத்தில் 7.8 ரிச்டர் அளவில் இந்த பூகம்பம் இடம்பெற்றதாக அமெரிக்க புவியியல் ஆய்வு நிலையம் குறிப்பிட்டுள்ளது.

துருக்கியில் உயிரிழப்பு எண்ணிக்கை 920 ஆக அதிகரித்திருப்பதாக அந்நாட்டின் துணை ஜனாதிபதி புவாத் ஒக்தாய் நேற்று பின்னேரம் குறிப்பிட்டிருந்தார். சிரியாவில் 560க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்ததாக அந்நாட்டு அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டலாம் என்று அஞ்சப்படுகிறது.

அலெப்போ, லடகியா, ஹமா மற்றும் டார்டுஸ் மாகாணங்களில் உயிரிழப்புகள் பதிவாகி இருப்பதாக சிரிய சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்நிலையில் எதிர்வரும் மணித்தியாலங்களில் உயிரிழப்பு எண்ணிக்கை வேகமாக உயரும் அச்சம் நிலவியது.

இந்த பூகம்பத்தின் மையப்புள்ளி கஹ்ரமன்மராஸ் மாகாணத்தின் பசர்சிக் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இதில் 10 நகரங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக துருக்கி உள்துறை அமைச்சர் சுலைமான் சொய்லு தெரிவித்துள்ளார்.

இதில் துருக்கியில் குறைந்தது 2,323 பேரும் சிரியாவில் குறைந்தது 639 பேரும் காயமடைந்திருப்பதாக பிந்திய செய்திகள் கூறுகின்றன.

பூகம்ப அதிர்வு லெபனான், எகிப்து மற்றும் சைப்ரஸ் நாடுகளிலும் உணரப்பட்டுள்ளது.

7.4 ரிச்டர் அளவில் பதிவான முதல் அதிர்வு இடம்பெற்று சில விநாடிகளில் இரண்டாவது அதிர்வு பதிவானதாக துருக்கி நில அதிர்வு தொடர்பான நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த பூகம்பம் "மிகப் பயங்கரமானதாகவும் அச்சுறுத்துவதாகவும் இருந்தது" என்று சிரியாவின் இத்லிப் நகரைச் சேர்ந்த அலா நாபி என்பவர் விபரித்துள்ளார். "நடு இரவில் விழித்தபோது ஒட்டுமொத்த கட்டடமும் அதிர்ந்து பயங்கரமாக இருந்ததோடு தப்பிப்பதற்கும் கடினமாக இருந்தது" என்று அவர் அல் ஜசீரா தொலைக்காட்சிக்குக் குறிப்பிட்டுள்ளார்.

கடுங் குளிருக்கு மத்தியில் குழந்தைகளுடன் மக்கள் வீதிகளுக்கு கத்தியபடி ஓட்டம் பிடித்ததை பார்க்க வேதனையாக இருந்தது. ஆனால் நாம் அனைத்து கட்டடங்களில் இருந்தும் வெளியேறி ஒரு பகுதியில் கூடினோம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

கட்டட இடிபாடுகளில் சிக்கியவர்களை காப்பற்றும் மீட்புப் பணிகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.

பூகம்பத்தைத் தொடர்ந்து துருக்கியில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. மீட்புப் பணிகள் முழு வீச்சில் நடந்து வருகின்றன. இடிந்து விழுந்த கட்டட இடிபாடுகளை அகற்றும் பணி நடந்து வருகிறது.

துருக்கி மற்றும் சிரியாவில் சேதங்கள் கடுமையாக உள்ளதால் அந்த நாடுகள் சர்வதேச உதவியை கோரியுள்ளன.

உலகில் அதிக இயக்கத்தில் உள்ள பூகம்ப வலையத்தில் துருக்கி உள்ளது. 1999 ஆம் ஆண்டு நாட்டின் வடமேற்கு பகுதியை தாக்கிய பயங்கர பூகம்பத்தில் 17,000க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர்.

துருக்கி நாட்டின் பெரும் பகுதி அனடோலியன் டெக்டோனிக் தகடில் அமைந்துள்ளது. இது யுரேசியா மற்றும் ஆபிரிக்கா ஆகிய இரு பிரதான தகடுகளுக்கு இடையில் இருக்கும் தளம் என்பதோடு இங்கு சிறிதான ஆரேபிய தகடும் உள்ளது. இந்த இரு தகடுகளும் இடம்மாறும்போது துருக்கியில் அழுத்தம் ஏற்படுவதாக நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதனால் துருக்கியில் நில நடுக்கம் வழக்கமாக இடம்பெறுவதோடு 2022இல் அந்நாட்டில் 22,000க்கும் அதிகமான அதிர்வுகள் பதிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தினகரன் விளையாட்டு

sports.tkn@lakehouse.lk

### பயிற்சிப் போட்டி:

## இலங்கை மகளிர் த்ரில் வெற்றி



மகளிர் டி20 உலகக் கிண்ணத்திற்காக அயர்லாந்துடன் நடந்த பயிற்சிப் போட்டியில் இலங்கை மகளிர் அணி கடைசி பந்து வரை போராடி 2 ஓட்டங்களால் த்ரில் வெற்றியை பெற்றது.

தென்னாபிரிக்காவின் ஸ்டலன் போச்சில் நேற்று (06) நடைபெற்ற இந்தப் போட்டியில் 150 ஓட்ட வெற்றி இலக்கை துரத்திய அயர்லாந்து அணிக்கு கடைசி ஓவருக்கு 4 ஓட்டங்களையே பெற வேண்டி ஏற்பட்டபோதும் அந்த ஓவரை வீசிய அச்சினி குலசூரிய ஒரு ஓட்டத்தை விட்டுக்கொடுத்து கடைசி இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை மகளிர் அணி 20 ஓவர்களுக்கும் 5 விக்கெட்டுகளை இழந்து 149 ஓட்டங்களை பெற்றது. ஆரம்ப வீராங்கனை ஹர்ஷிதா சமரவிக்ரம 46 பந்துகளில் 7 பௌண்டரிகளுடன் 56 ஓட்டங்களை பெற்றார். அணித் தலைவி சாமரி அத்தபத்து 26 பந்துகளில் 27 ஓட்டங்களை பெற்றதோடு விஷ்மி குணரத்ன 36 பந்துகளில் 36 ஓட்டங்களை பெற்றார்.

இலங்கை ஆரம்பத்தில் சிறப்பாக ஆடி ஓட்டங்களை பெற்றபோதும் கடைசி ஓவர்களில் அந்த ஓட்ட வேகத்தை தக்கவைத்துக்கொள்ள தவறியது.

இதன்போது அயர்லாந்து அணி சார்பில் ஏழு பந்துவீச்சாளர்கள் பயன்படுத்தப்பட்டபோதும் லோரா டிலானி 3 விக்கெட்டுகளை பதம் பார்த்தார்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய அயர்லாந்து அணியின் விக்கெட்டுகளை முக்கிய இடைவெளிகளில் இலங்கை பந்துவீச்சாளர்களால் வீழ்த்த முடிந்தபோதும் அந்த அணி கடைசி ஓவர் வரை இலக்கை நோக்கி முன்னேறியது. எனினும் அயர்லாந்து அணி 19.5 ஓவர்களில் 147 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. இதன்போது இலங்கை சார்பில் ஓஷதி ரணசிங்க மற்றும் இனோகா ரணவீர தலா 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தனர். டி20 மகளிர் உலகக் கிண்ணப் போட்டி வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் இலங்கை மகளிர் அணி நாளை இரண்டாவது பயிற்சிப் போட்டியில் மேற்கிந்திய தீவுகளை எதிர்கொள்ளவுள்ளது.

### ஆசிய விளையாட்டுப் போட்டி:

## கொழும்பு துறைமுக நகரில் இன்று 'பன் ரன்' நிகழ்ச்சி



சீனாவின் ஹொங்சூ நகரில் இந்த ஆண்டு கடைசியில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டியை ஒட்டி 'பன் ரன்' விளையாட்டு நிகழ்ச்சி இன்று (07) கொழும்பு துறைமுக நகரில் நடைபெறவுள்ளது. கொழும்பு, ஒலிம்பிக் இல்லத்தில் நேற்று (06) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்த நிகழ்வு குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. ஆசிய ஒலிம்பிக் கௌன்சில் பணிப்பாளர் நாயகம் ஹுஸைன் அல் முசல்லம் ஆதரவுடன் நடைபெறும் இந்த நிகழ்வில் 200 பாடசாலை மாணவர்கள் உட்பட 700க்கும் அதிகமானர்கள் பங்கேற்கும் விளையாட்டு, கலை மற்றும் சாகச நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. ஆசிய பிராந்தியம் முழுவதும் உள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் சமூகத்தினரை ஒன்றிணைக்கும் வகையில் பிராந்தியம் முழுவதையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலேயே இந்த நிகழ்வு இடம்பெறுகிறது. முன்னதாக கடந்த பெப்ரவரி 04 ஆம் திகதி மாலைதீவில் நடைபெற்றதைத் தொடர்ந்தே இந்த 'பன் ரன்' நிகழ்ச்சி தற்போது இலங்கையில் நடைபெறுகிறது.

இன்று பிற்பகல் 2.30 ஆரம்பமாகும் நிகழ்ச்சிகளில், படகோட்டம், டைக்கொண்டோ, கரப்பந்தாட்ட கண்காட்சி, இசை, நடனம் மற்றும் இலங்கை சண்டைக் கலையான அங்கம்பொர நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

கொரோனா தொற்றினால் பிற்போடப்பட்ட ஆசிய விளையாட்டுப் போட்டி வரும் செப்டெம்பர் 23 தொடக்கம் ஒக்டோபர் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

(படம்: ரஞ்சித் அசங்க)

## கொழும்புடனான போட்டியை சமன் செய்தது யாழ்ப்பாணம்



இலங்கை கிரிக்கெட் சபையால் நடத்தப்படும் தேசிய சுப்பர் லீக் தொடரில் கொழும்பு அணிக்கு எதிரான போட்டியை சமன் செய்த யாழ்ப்பாணம் அணி தொடரில் முதல் புள்ளியை பெற்றுக் கொண்டது.

மழைக்கு மத்தியில் கடந்த பெப்ரவரி 02 ஆம் திகதி ஆரம்பமான மூன்றாம் வாரத்தின் போட்டிகளில் தம்புள்ளை மற்றும் கண்டி அணிகளுக்கு இடையில் தம்புள்ளையில் நடைபெறவிருந்த ஆட்டம் ஒரு பந்து கூட வீசப்படாது கைவிடப்பட்டது.

எனினும் பல்லேகலவில் நடைபெற்ற யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு அணிகளுக்கு இடையிலான நான்கு நாட்கள் கொண்ட போட்டி மழையின் இடையூறுக்கு மத்தியிலும் இடம்பெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட தனஞ்சய டி சில்வா தலைமையிலான யாழ்ப்பாணம் அணி முதல் இன்னிங்ஸுக்காக சகல விக்கெட்டுகளையும் இழந்து 199 ஓட்டங்களை பெற்றது. றொன் சந்திரகுப்தா (68) அரைச்சதம் பெற்றார்.

இந்நிலையில் கொழும்பு அணி முதல் இன்னிங்ஸில் 289 ஓட்டங்களை குவித்தது. அணித் தலைவர் அவிஷ்க பெர்னாண்டோ (62) மற்றும் மனோஜ் சரத்சந்திர (57) அரைச் சதம் பெற்றனர்.

தொடர்ந்து முதல் இன்னிங்ஸில் பின்தங்கி இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய யாழ். அணி கடந்த ஞாயிற்றுக்கிழமை (05) கடைசி நாள் ஆட்ட நேர முடிவின்போது 8 விக்கெட்டுகளை இழந்து 229 ஓட்டங்களை பெற்றது.

யாழ். அணி இந்தத் தொடரின் முதல் போட்டியில் தோல்வி அடைந்த நிலையில் இந்த போட்டியை சமன் செய்தமை குறிப்பிடத்தக்கது.

## றினோன் தலைவர் கிண்ணம்: யாழ். மத்தி, சாஹிரா அரையிறுதிக்கு தகுதி



இலங்கை பாடசாலைகள் கால்பந்து சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 18 வயதின் கீழ் பிரிவு 1 அணிகளுக்கு இடையிலான றினோன் தலைவர் சம்பியன்ஷிப் சுற்றுப் போட்டியின் அரையிறுதிக்கு முதல் இரண்டு அணிகளாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற்றும் கொழும்பு ஸாஹிரா கல்லூரி அணிகள் தெரிவாகியுள்ளன.

ஏற்கனவே இடம்பெற்று முடிந்த குழு நிலைப் போட்டிகளின் நிறைவின்படி, தத்தமது குழுக்களில் முதலிரு இடங்களையும் பெற்ற அணிகள் காலிறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றன. அதன்படி, முதலிரு காலிறுதிப் போட்டிகளும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (05) கொழும்பு சுகததாச அரங்கில் இடம்பெற்றன. இதில் கிண்ணியா அல் அக்ஸா கல்லூரிக்கு எதிரான காலிறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 5–2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. இதில் அபிஷான் முதல் பாதியில் இரு கோல்களும் கடைசி நேரத்தில் மற்றொரு கோலையும் பெற்று யாழ். மத்திய கல்லூரிக்காக ஹட்ரிக் கோல் புகுத்தினார்.

இதேவேளை மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரிக்கு எதிரான மற்றைய காலிறுதிப் போட்டியில் ஆதிக்கம் செலுத்திய கொழும்பு சாஹிரா 3–1 என்ற கோல் வித்தியாசத்தில் வென்று அரையிறுதிக்கு முன்னேற்றம் கண்டது.

போட்டியின் முதல் பாதியில் ஆகில் மற்றும் அணித் தலைவர் சியாட் ஆகியோர் ஸாஹிரா கல்லூரிக்காக தலா ஒரு கோலைப் பெற்று இரு கோல்களால் அணியை முன்னிலைப்படுத்தினார். தொடர்ந்து இரண்டாவது பாதியின் கடைசி நிமிடங்களில் சியாட் மற்றொரு கோலையும் புகுத்தினார்.

## சீன-இலங்கை நட்புறவு கிண்ணம் சாவியா வெட்டரன்ஸ் வசமானது



ருஸைக் பாரூக்

முஸ்லிம் உரிமைகளுக்கான கூட்டணி 9ஆவது வருடமாக ஒழுங்கு செய்த 40 வயதுக்கு மேற்பட்ட சீன–இலங்கை நட்புறவுக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டியில் சாவியா வெட்டரன்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது. கொழும்பு ரட்னம் மைதானத்தில் கடந்த ஞாயிறன்று (05) இடம்பெற்ற இந்தத் தொடரில் இறுதிப் போட்டியில் சுப்பர் மூன் அணியை சாவியா வெட்டரன்ஸ் தோற்கடித்தது.

சம்பியன் அணியின் தலைவர் கிறிஷாந்த அபேசேகர பிரதம அதிதியான இலங்கைக்கான சீன நாட்டின் தூதுவர் கி சென்ஹொங்கிடம் இருந்து இரண்டு இலட்சம் ரொக்கப்பரிசு மற்றும் சம்பியன் கிண்ணத்தை பெற்றுக்கொண்டார்.

மேலும் ஹம்ஸா மகா வித்தியாலயம், தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயம், அல் ஹிக்மா கல்லூரி, டி.பி.ஜாயா ஸாஹிரா கல்லூரி, இரத்தினம் அகடமி மற்றும் ஜொயின்டர்ஸ் லயன்ஸ் கழகம் ஆகியவற்றுக்கான உதைபந்து மற்றும் ஜெர்சிகளையும் பிரதம அதிதி வழங்கி வைத்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 பெப்ரவரி மாதம் 7ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.